பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
## VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 27 வியாழக்கிழமை (10.04.2003) தொலைபேசி- 2223378 ஒலி 112

# எமது கடலாதிக்கப் பகுதிக்குள் கடற்படை நுழையக் கூடாது!

## கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு

(கிளிநொச்சி)


**கடற் பிராந்தியத்தில் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பது தொடர்பான புதிய திட்ட வரைபு ஒன்றினை உருவாக்குவது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும்,விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.**

இச் சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவச் செயலகத்தில் முற்பகல 10.30மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை இடம் பெற்றது.

இச் சந்திப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் அமைப்பின் பிரதிநிதிகளான எரிக் பீற்றர் சென், மிக் ஹெல்சன் மற்றும் கடல் கண்காணிப்பாளர் போல் எரிக் ஆகியோரும் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை மற்றும் வட போர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன்

(10ம் பக்கம் பார்க்க)





கிளிநொச்சியில் நேற்று புலிகள்-கண்காணிப்புக் குழுவினர் சந்திப்பின் சில காட்சிகள்.

# புதிய படைத் தளம் குறித்து நேற்று முக்கிய மாநாடு

## முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரின் மத்தியில் அமைந்துள்ள படைத் தளத்தை வேறோர் இடத்துக்கு மாற்றுவது குறித்து ஆராயும் உயர்மட்ட மாநாடு நேற்று யாழ்.அரச செயலகத்தில் நடை பெற்றுள்ளது.இம் மாநாட்டில் படைத் தரப்பின் உயரதிகாரிகளும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.**

**எனினும் இம் மாநாட்டில் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படவில்லை.**

பாதுகாப்புப் படையின் பிரதித் தளபதி மேஜர் ஜெனரல் எல்.சி.ஆர். குணவர்த்தனா தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கே.டபிள்யூ.இ.கரலிஅத்த, யாழ்.மாவட்ட படைத் தளபதி சரத் பொன்சேகா,51வது படையணியின் தளபதி பிரிகேடியர் சில்வாவும்,தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன்,மாவை.சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம்,என்.ரவிராஜ், ஜி.கஜேந்திரகுமார்,அ.விநாயகமூர்த்தி, துரைரெட்ணசிங்கம், என்.மதனராஜன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இம்மாநாட்டின் போர்து பாதுகாப்புப் படையினர் யாழ்.மாநகர சபையின் வளவிலும் அதனை அண்டிய பிரதேசத்திலும் தமது முகாமினை அமைக்கும் பட்சத்தில் பொது மக்கள் எதிர் நோக்கக் கூடிய அசௌகரியங்கள் மற்றும் வசதியீனங்கள் பற்றியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலாவாரியாக எடுத்து விளக்கியிருந்தனர்.

இருந்த போதிலும் தமது முகாமினை அமைப்பதற்குரிய பொருத்தப்பாடான இடத்தைத் தெரிவு செய்வதில் படைத்தரப்பில் பல்வேறு சிரமங்கள் எதிர் நோக்கப்படுவது குறித்து அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் கூட குறித்த பிரதேசத்தில் முகாம் அமைக்கப்படுவதைத் தவிர்க்கும் படியாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தினர்.

எனினும் இது விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையில் சுமுகமான நிலை இறுதிவரை எட்டப்படவில்லை.

(10ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் சரணடைந்தார்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியிலுள்ள யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் பாதுகாப்புத் தஞ்சம் கோரி சரணடைந்த ஈ.பி.டி.பி உறுப்பினரொருவர் நேற்றுக் கண்காணிப்புக் குழுவினரால் யாழ்.பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

செல்லப்பா பரமன் என்ற இளைஞனே இவ்வாறு சரணடைந்து பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டவராவார். (இ)

## திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று சிங்களப் பொது மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

திருகோணமலை நகர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த இரு சிங்கள இளைஞர்கள் காணாமல் போனமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால் நகரை அண்டிய கடைகள், சந்தைகள்,போக்குவரத்துக்கள் என்பன முற்றாக ஸ்தம்பித்தன. (இ-8)

## தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

உலகப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் கிறா,ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூலின் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரி மிக் கிலின்பேனியா ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

முற்பகல் 10.30மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் சிரான் அமைப்பின் பணிகள், உலக நிதியை எவ்வாறு கையாளுதல் மற்றும் சிறுவர் தொடர்பான விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளன.(இ)

## பொது அமைப்புக்கள் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்தியில் அமைந்துள்ள படைத் தளத்தை வேறோர் இடத்திற்கு மாற்றுவது குறித்து யாழ். அரச செயலகத்தில் நேற்று நடத்தப்பட்ட உயர் மட்ட மாநாட்டிற்கு தமக்கு அழைப்பு விடுக்காமைக்கு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அரச செயலகத்தில் யாழ்.படைத் தலைமையக உயரதிகாரிகளும், யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் படைத் தளத்தை வேறோர் இடத்திற்கு மாற்றுவது குறித்து நேற்று ஆராய்ந்துள்ளனர்.

இம் மாநாட்டுக்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படாமையையே பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டித்துள்ளது. (இ)

## சந்திரிகா-சதீஸ் நம்பியார் புதுடில்லியில் நேற்று சந்திப்பு

### உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய்வு

(புதுடில்லி)

உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றைய தினம் முன்னாள் இந்திய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பின் போது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் உயர் பாதுகாப்பு வலய பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகவும், சமாதான முயற்சிகளின் போக்குக் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துதல் தொடர்பாகவும் மற்றும் சர்வதேச நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள மௌயா

(10ம் பக்கம் பார்க்க)

# பணிநோக்கின் வழியாக பத்திரிகைகள் தன் பிரதேச மக்களை வழிப்படுத்த வேண்டும்

## அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை எடுத்துரைப்பு

**வலம்புரி-சங்குநாதம் ஏற்பாட்டில் வலம்புரி கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நிர்வாக இயக்குநர் சி.வெற்றி வேலாயுதம் தலைமையில் இடம்பெற்ற எழுத்தாளர் சபை அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட அறிஞர்கள் ஆற்றிய உரைகள் இங்கு தொகுத்துத்தரப்படுகின்றன.**

பத்திரிகை நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் போல செயற்பட்டாலும் அவை ஒரு பொதுப் பணி நிறுவனங்களாக செயற்படவேண்டிய பாரிய பொறுப்பு உண்டு.

பத்திரிகை நிறுவனங்கள் அல்லது பத்திரிகைக் காரியாலயங்கள் தனியாரினால் நடத்தப்பட்டுக்கொண்டிருந்தாலும் ஒரு பொது நிறுவனங்களாகவே எப்போதும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் வலம்புரிப் பத்திரிகை இன்று ஆரம்பித்து வைக்கின்ற எழுத்தாளர்சபை ஒரு



பணியாகும்.

பத்திரிகை நிறுவனங்கள் இலாப நோக்கில்லாமல் செயற்படுகின்ற நிறுவனங்கள் அல்ல. இருந்தாலும் இலாப நோக்கின் மத்தியில் இன்னொரு புறம் பணி செய்கின்ற நோக்கை அவர்கள் கொண்டிருக்க வேண்டும்.

அநதப் பணிநோக்கின் வழியாகத் தான் அவர்கள் தாம் வாழுகின்ற சமுதாயத்தில்,பிரதேசத்தில் அங்கு வாழுகின்ற மக்களை வளப்படுத்தவும் வழிப்படுத்தவும் முடியும்.

இளைய சமுதாயத்தினரைக் குறிப்பாகக் கொண்டு இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றதென நான் நினைக்கிறேன்.

பத்திரிகைக்கு பல்வேறுபட்ட பணிகள் உண்டு. அறிவித்தல், அறிவுறுத்தல், வழிகாட்டல், விமர்சித்தல் என ஏராளமானவற்றை நாம் கூறிக் கொண்டு போகமுடியும்.

இந்த வழிகாட்டல் பணிகளை ஒரு பிரதேசத்தில் ஒரு பத்திரிகை செய்கின்ற போது அதனால் பயனடைகின்றவர்கள்அந்த சமுதாயத்தில் வாழுகின்றவர்களே.

ஒரு பிரதேசத்தில் அதிக பத்திரிகைகள் வருகின்ற போது அந்தப் பிரதேசம் உண்மையிலேயே வளப்படுத்தப்படுகின்றது. காரணம், அந்தப் பத்திரிகையினுடைய பணியினை அவர்கள் பெற்றுக கொள்கிறார்கள்.

உண்மையை மதிக்கவும் உரிய ஜனநாயகத்தின் மதிப்பீடுகளைப் பேணிப்பாதுகாக்கவும் மக்களை வழி நடத்தவும் பத்திரிகைகளால் முடிகின்றது.

நாளைய தமிழ் மக்கள் நன்மை பெற வேண்டும் என்ற நோக்கோடும் அவர்களுக்குத்துணை புரிகின்ற வகையிலுமாக இந்த எழுத்தாளர் சபை அங்குரார்ப்பண நிகழ்வை இங்கு ஆரம்பித்திருக்கின்றார்கள். வலம்புரிப் பத்திரிகைக்குரிய ஒரு தனியான பணியாக இது இருக்குமென நான் எண்ணுகிறேன்.

இதனால் இலைமறை காயாக இருக்கின்ற எத்தனையோ எழுத்தாளர்களை இங்கு இனம் கண்டு கொள்ள முடியும்.

எழுத்தாற்றல்களையும் திறமைகளையும் தங்களுக்குள்ளே புதைத்து வைத்திருக்கின்ற இளம்எழுத்தாளர் பலரை இனங்கண்டு கொள்ள இது வழி வகுக்கும் என நம்புகிறேன்.

அது மட்டுமல்ல இன்று எங்களுடைய தமிழ் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டும் பணிபுரிந்து கொண்டும் இருக்கின்ற பழம் எழுத்தாளர்களுடன் அறிமுகத்தை ஏற்படுத்தவும் இந்நிகழ்வு உதவுமென நான் நினைக்கின்றேன்.

பத்திரிகைகளைப் படிக்க அதில் வருகின்ற ஆக்கங்களை அறியவும் அவற்றில் எழுதுகின்ற எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை அறிந்து கொள்ளவும் இன்றைய இளம் சமுதாயம் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை.

பத்திரிகையாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே ஒரு வேறுபாடு உண்டு.எழுத்தாளர்கள் எப்போதும் எழுதிக் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்களுக்கு எழுதுவதற்குரிய நேரம், ஒரு காலம் ஒரு மனநிலை தேவை. பத்திரிகையாளர் அப்படியானவரல்ல. பத்திரிகையாளர்கள் தூங்கமாட்டார்கள். எப்போதும் அவர்கள் எழுதிக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு. சமுதாயத்தில் வருகின்ற பத்திரிகைகளுடைய தன்மை அங்கு பணியாற்றுகின்ற பத்திரிகையாளனுடைய மனநிலையையும் மன முதிர்ச்சியையும்பொறுத்தது.

பத்திரிகைகளுக்குபபத்திரிகைகள் முரணான எண்ணங்களையும் குரோத மனப்பான்மைகளையும் வளர்த்துக் கொள்வது சரியானதல்ல.

ஒரு பத்திரிகையாளனுக்கு இன்னோர் பத்திரிகையாளனைப் பார்க்கின்ற போது பேசிக் கொள்ள முடியாமல் போகின்ற ஒரு நிலை யாழ்ப்பாண மண்ணில் வருத்தத்திற்குரிய ஒரு நிலையாகும்.

### பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்

ஐம்பதுவருடங்களின் முன்பு உங்களைப்போல்தான் நானும் இருந்தேன்.அப்பொழுது இவ்வாறு பத்தி



ரிகைகள் எம்மைஅழைத்து இவ்வாறானசபைகளை உருவாக்கவில்லை. நாமாகவே உருவாக்கினோம்.

43 வருடங்களுக்குமுன் சொக்கன், வரதர் போன்றவர்களின் தலைமையில் நாம் கூடினோம். அதை சபை என்று கூறமுடியாது. இலக்கிய ஒற்றுமை, சிந்தனை என்ற நிலையில்தான் நாமிருந்தோம்இதற்கு என்ன குறிக்கோள்என்று இவர்கள் கூறவில்லை. நான்நினைக்கின்றேன் இக்கூட்டத்தின் குறிக்கோள் எழுத்தாளர்களை ஒன்றுதிரட்டி அவர்களை அறிமுகப்படுத்துவது என்று.

தமிழ் அகராதியை எடுத்துபார்த்தால், எழுத்தாளர்பற்றிக் கூறுமபோது கதை, கட்டுரை எழுதுபவர் என்றிருந்தது.அப்படியாயின் கவிதை எழுதுபவர் யாரென்றுபார்த்தால் அவர் ஒரு படைப்பாளி என்றிருந்தது.

நான் கவிதைதான் ஆரம்பத்தில் எழுதினேன். அதில் ஒன்றை தினகரனுக்கு அனுப்பினேன். அது பாலர் பகுதியில் வெளிவந்தது. பாலர் பகுதிக்கு எழுதுவது கடினம். அத்தோடு கவிதை அனுப்புவதை விட்டுவிட்டேன்.நீங்கள் எழுத்தாளராக வரமுன ஆர்வலராக இருக்கவேண்டும். அதற்கு முன் வாசகராக இருக்க வேண்டும் .எழுத்தாளரது பரிணாம வளர்ச்சி என்பது எமது அனுபவத்தின்படி, முதல்வாசகர் பின்ஆர்வலர் அதன் பினனரே எழுதமுனைய வேண்டும். எழுதிய பின் ஒருமுறை விமர்சனம் செய்ய வேண்டும். ஆர்வலரும்விமர்சிக்கலாம் எழுத்தா ளரும் விமர்சிக்கலாம். ஆனால் தற்போது ஏனைய மக்களே விமர்சிக் கின்றனர். கடடுரையே முதலில் எழுதவேண்டிய அம்சம்.கட்டுரையில் பொய் சொல்ல முடியாது. இலக்கணப் பிழைவிட முடியாது. விடயம், உண்மை போன்றவை வேண்டும். இலக்கணம் சரியாயிருக்கவேண்டும்.கதைக்கு எபபடியும் அமையலாம்என்றநிலை இன்று உள்ளது. பிழைவிடுவது நாகரிகம். எழுதுவதற்கு வசனம் வராவிடில முற்றுப்புள்ளிகள் தொடரும்.

நாங்கள்நினைப்பது கதை எழுதுவது இலகுவானது. என்னவும் எழுதலாம் என்று மனம்கூடபக்குவப் படுத்தப்படவேண்டும்.பயிர்வளர்க்க அதனை உழ வேண்டும்.எருபோட வேண்டும்.உரம்போடவேண்டும் பிறகே பயிர் வளரும். கொச்சைத் தமிழ் பாவித்து தப்பிக்கொள்ள முடியாது. கதை எழுதும் ஆற்றல் இயற்கையாய் வரக்கூடும். அவ்வாறு இருந்தால் கூட பயிற்சி வேண்டும். பாட்டு, நாட்டியம் போன்றவையும் அவ்வாறே.ஆனால் அவை அங்கீகரிக்கப்பட பயிற்சி வேண்டும்.

சிலர் நினைக்கின்றனர் உணர்ச்சி இருந்தால் கதை வரும் என்று. முரளிதரன் இருந்தால் போல் இவ்வாறு உயரவில்லை.ஒரு நாளுக்கு 18 தடவைகள் பயிற்சி செய்ததால் தான் முரளிதரனாக வரலாம்.

பொறுமை ,ஊக்கம்,விடா முயற்சி என்பன எழுத்திற்கும்அவசியமானது. தற்போது சிற்பி ,வரதர் போன்றோரது தொகுப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எழுத்தாளன் அதிகம் வாசிக்கவேண்டும். எழுத்தாளர்களுக்கிடையே தொடர்புகள் வேண்டும். விமர்சனங்கள், ஆய்வுகளை மேற்கொள்ள வேண் டும்.எழுத்தாளர்களை குறைத்து மதிப்பிட வேண்டாம்.

நாம் எழுதிய 100 கதை இருக்கும். அவற்றில் இரண்டு மட்டுமே சிறப்பாய் இருக்கும்.வலம்புரி இவ்வாறானவற்றை இனங்கண்டு ஒரு காலத்தில் ஒரு தொகுப்பு நூல் வெளியிடவேண்டும்.தமிழின் சிறந்த கதைகள என்ற தலைப்பில் அதனை வெளியிட வேண்டும்.

### பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

உண்மையிலேயே இந்த யாழ்ப்பாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை நாம்முன்னெடுக்க வேண்டும என்றால் மிக முக்கியமானதுறையாகநான் கருதுவது இந்த பத்திரிகை ஊடகம் தான்.இலத்திரனியல் ஊடகத்தில் நாம் முன்னேற இன்னும் நாள் உள்ளது.

யாழ் குடா நாட்டில் அதிலும் யாழ்ப்பாணத்தில் அச்சுக் கூடவேலைகளை திருத்தமாகச் செய்யக்கூடிய 'ஆற்றல்களை நாம் பெறுவோமாய் இருந்தால் எழுத்துப்பிழை,கருத்துப் பிழைபோன்றவற்றில் இருந்து விடுபடுவோமானால் எமது குடாநாட்டினுடைய வேலையை மட்டும் அல்லாது இலங்கை முழுவதற்குமுரிய வேலைகள் ஏன் ?இந்திய தமிழ் நாட்டிற்குரியவேலைகள், தமிழ்பேசும் மக்களுக்குரியவேலைகள்இதற்கும் ஒரு படிமேலே சென்று யுனிசெப் ,ஐ.நா. சபை போன்ற பல நிறுவனங்களுடைய ஆண்டறிக்கைகள் போன்றவற்றை தயார்செய்து வெளியிடுவதற் கும் நாங்கள் ஒப்பந்தம் எடுக் கலாம்.

முதலாவது நான் கூறக்கூடியது எனனவென்றால் இந்தப்பிரதேசத்தினுடைய கைத்தொழில்வளர்ச்சிக்கு இந்த அச்சுத்தொழில்பெரிதும் உதவுகின்றது.மேலும் விருத்தி செய்யும் நிலை உள்ளது.நாம் அதை நவீனப்படுத்துவதற்கு பாடுபட வேண்டும்.

குறிப்பாக இந்த அச்சுக்கூடத்திற்குாய செயற்பாடுகள்,மக்களது அறிவு என்பன இன்று நிறைந்து வந்து



கொண்டிருக்கின்றன .மக்கள் இன்று நிறைய படித்திருக்கின்றனர். .பொதுவாக நாம் சொல்வதென்னவென்றால் யாரும் வாசிப்பதில்லை. உங்களுக்குத் தெரியும்போட்டிப்பரீட்சை என்றால் மன அமைதியுடன் இருந்து படிப்பதற்கு முடியாது.நான் உயர்தரம் படித்த பொழுது இடைக் கிடைதான் படிப்பேன். ஏன் என்றால் தகுதி காண்பரீட்சை நாற்பது புள்ளிகள் படி நான்கு பாடங்களுக்கு எடுத்துவிட்டால் பல்கலைக்கழகம் சென்றுவிடலாம்.புதிய வாசகர் கூட்டம்அதிகம் வந்துள்ளது. எம்மிடம் குடும்பப்பெண்கள்,ஆசிரியர்கள், சாதாரண, இளைப்பாறிய, உத்தியோகத்தர் போன்ற நிறைய வாசகர் கூட்டம்எழுத்தில் ஈடுபாட்டுடன் உள்ளது.இரண்டாவதாக தொலைக்காட்சி ,வானொலி,சர்வதேசவலைப் பின்னல் போன்றவை வந்தாலும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உள்ளதேஅல்லாமல் ஒன்றை ஒன்று முநதவில்லை. வானொலி, தொலைக்காட்சியை இல்லாது செய்யவில்லை. தொலைக்காட்சி வானொலியை இல்லாது செய்யவில்லை.வானொலிச் செய்தி கேட்டபடியால் நாம் பத்திரிகை வாசிக்காது விடவில்லை. ஆகவே ஒன்றிற்கு ஒன்று உதவியாக உள்ளதே அல்லாமல் ஒன்றை ஒன்று நிறுத்தவில்லை.

ஆனால் எல்லாத்துறைக்கும் எழுத ஆள்தேவை.அதிகம் எழுத்தாளர் தேவை.எமக்குள்ளே சிறப்பான எழுத்தாளர் பலர் உள்ளனர். சிறுகதை ,நாவல்,அரசியல் விவகாரம்,இலக்கியம்,சமயம் போன்றவற்றிலும்சிறப்பு எழுத்தாளர் உள்ளனர்.

முன்னர் ஒரு பக்கம் பாதிப் பக்கத்தில் பத்திரிகைகள் வந்தன.இன்று யாழ்ப்பாண பத்திரிகைகள் யாவும் பதினாறு பக்கம்,பன்னிரண்டு பக்கங்கள் வெளி வரத்தொடங்கியுள்ளன. அவற்றிற்கு அதிகம் எழுத வேண்டும். விளம்பரம்எழுதுவது கூட ஒரு கலை. பத்திரிகைகள் அதிகரிக்கின்றன, இலத்திரனியல் ஊடகம் அதிகரிக்கின்றது.அடுத்து சிறப்புத்தன்மைகளும் பத்திரிகையின அளவுகளும் அதிகரித்துள்ளன.

அரசியல்,திறனாய்வு, மொழி பெயர்ப்பு,விளம்பரங்கள் போன்றவைஉள்ளடக்கப்படுகின்றன. இத்தகைய பின்னணியில் எழுத்தாளர்களை ஒரு சபையாக உருவாகும்போது பல்வேறு அங்கீகாரம் அவர்களுக்கு வரும் என்று அவர்கள் தங்களுக்குள்ளே அறிமுகமாகி ஒரு அணியாக செயற்படவாய்ப்புள்ளது. அடுத்து ஒரு வள நிலையம் ஏற்படுத்தப்படும் பொழுது நூல்களை எழுத,வாசிக்க ,தரவுகளைப் பெற அது உதவும்.

பல முக்கிய பணிகளை நீங்கள் சமூகத்திற்கு ஆற்றவேண்டியுள்ளீர்கள். சமூகமும் இன்று முன்பு போல் இல்லாமல் பத்திரிகையையே போற்றுகின்றது. பத்திரிகை வாசிக்கும் அல்லது செய்தி கேட்டும் அந்த இயல்பு படிமையாக அதிகாக்கஇத்தகைய பின்னணி அதாவது இச்சங்கத்தினது உருவாக்கம் நிச்சயமாக உங்களுக்குபலனைப் பெற்றுத்தரும். இந்தச் சங்கம் உருவாகும் போது பல அடிப்படை வசதிகள் உங்களுக்கு பெற்றுத்தர வாய்ப்பு இருக்கும்.

விவசாயிகளின்கடன் உதவித் திட்டம்,மீன்பிடிகடன்உதவித்திட்டம் போன்றுகதை எழுத கடன் உதவித் திட்டம் என்றும் உருவாக வேண்டும். அது உங்களது அறிவு சார்ந்த முன்னேற்றத்திற்கும் தொழில் சார்ந்த முன்னேற்றத்திற்கும் வழி சமைக்கும். ◘

# கண்காணிப்புக் குழுவின் பணிகளை மேம்படுத்த சுவீடன் ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக அனைத்து ஒத்துழைப்புக்களையும் சுவீடன் அரசு வழங்கும் என வெளிநாட்டு விவகார அமைச்சின் ஆசிய பிராந்தியத்திற்கான பிரதிப்பணிப்பாளர் நாயகம் திருமதி ஈவாவோல்டர் புருன்டீன் தெரிவித்துள்ளார்

கடந்த திங்கட்கிழமை நிதியமைச்சர் சொக்ஸியைச் சந்தித்து பேசிய போதே ஈவாவோல்டர் புருன்டீன் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது, இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு சுவீடன் தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறது.

2003 ஆண்டு முதல் 2005 ஆணடு வரையான காலப்பகுதியில இலங்கையின் அபிவிருத்திப் பணிகளை திறம்பட மேற்கொள் வதற்கு சுவீடன் அரசு 300 கோடி ரூபாவிற்கும் அதிக மான நிதியை உதவியாக வழங்கவுள்ளது. என்றார்.

இதேவேளை,இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றிலும் நேற்று முன்தினம் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கை அரசின் சார்பில் நிதி அமைச்சின் மேலதிக செயலாளர் பாயிஸ் மௌஹிதீனும் சுவீடன் அரசு சார்பில் திருமதி புருன்டீனும் கைச் சாத்திட்டனர்.

சுவீடன் அரசினால் வழங்கப்படும் இந்த உதவித் தொகை மூலம் கிராமிய நகர மட்டத்தில் சுய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் கிராமிய பாதைகளை அபிவிருத்தி செய்யவும் கல்விப்பரிவின் நடவடிக்கைகளை மேம்படுத்தவும் சிறுவர்களின் மற்றும் பல்கலைக்கழங்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நிதி அமைச்சர் சொக்ஸி தெரிவித்துள்ளார். (உ-10)

## யாழில் பொலிஸ் முறைப்பாடு தமிழில்

(யாழ்ப்பாணம்)

யாழ் .குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் செய்யப் படும் முறைப்பாடுகள் தமிழில் பதிவு செய்யப்படுகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணத் திற்கு வருகைதந்த பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் உத்தரவுக்கு அமையவே முறைப் பாடுகள் தமிழில் பதிவு செய்யப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 3ம் திகதியிலிருந்து யாழ்.குடாநாட்டிலுள்ள எல்லாப் பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் தமிழில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்காக தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் பணிக்கு அமர்த்தப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(இ-5,7)

## இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இராமநாதன் வீதி கலட்டியைச் சேர்ந்த செல்லத்துரை சுரேந்திரன் (வயது19) என்பவரே படுகாயமடைந்தவராவார். வீட்டு வளவைத் துப்புரவு செய்துகொண்டி ருந்த சமயமே மிதிவெடியில் சிக்குண்டதாக தெரிவிக்கப்பட்டது. (த-7,6)

# இருபது வருடங்கள் பட்ட துன்பம் போதும் - இனி யுத்தம் என்ற சொல்லை உச்சரிக்கவே கூடாது

## அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்ததேரர்

(கொழும்பு)

கடந்த இருபது வருடங்களாக



யுத்தத்தின் கொடுமைகளை நாம் எல்லோரும் நன்றாக அறிந்தும், உணர்ந்தும் கொண்டோம். எனவே நாம் இனிமேலும் "யுத்தம்" எனற சொல்லையே பயன்படுத்தவே கூடாது. அதனை மறந்து விட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அஸ்கிரிய பீடாதிபதி மகாநாயக்க உடுகம ஸ்ரீ புத்தரகித்ததேரர்.

சமாதானத்திட்டம் தொடர்பாக கண்டி பௌத்த சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற புகைப்படக் கண்காடசியின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இனியும் இலங்கையில் யுத்தம ஏற்படுமானால் அது மக்களின் உயிர்களைக் காவுகொள்வது மட்டுமன்றி உடமைகளையும் அழித்துவிடும். இறுதியில் இலங்கையின் வளம் அனைத்தையும் அழித்துவிடும்.

எனவே யுத்தத்தை தவிர்த்து சமாதான முயற்சிகளை அனைவரும் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்.

குறிப்பாக, சமாதான முன்னெடுப்புக்களுக்கான சகல முயற்சிகளுக்கும் ஊடகங்கள் அனைத்தும தமது அரிய பங்களிப்பை வழங்க வேண்டும்.

ஊடகங்கள் ஒரு போதும் சமாதான முயற்சிகளை குழப்பியடிக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. இத்துடன் இச்செயலில் ஈடுபடும் வகையில் மக்களைத் தூண்டி விடவும் கூடாது. சமாதானத்தின் பெறுமதியை உணர்ந்து அனைத்து மக்களுக்கும் இதன் தேவையை உணர வைப்பதன் மூலம் மிகுந்த பலனையும் பெற முடியும் என்றார்.

இதேவேளை, தனக்கு யாழ்ப்பாணம் சென்று அங்கு வாழும் மகளின் நிலைகளை நேரில் கண்டு மக்களுடன் இது தொடர்பாக உரையாட மிகவும் விருப்பமாக உள்ளதாகவும் அங்கு தெரி வித்தார்.

இதற்கான அழைப்பு வந்தால் நிச்சயமாக தாம் அங்கு போக விருப்பதாகவும் குறிப்பிட்டார்.

முன்னாள் மகாநாயக்கரான காலஞ்சென்ற அமுனுகம விபஸ்ஸி தேரர் கடந்த 1970 ஆண்டு யாழ்ப்பாணம் வந்த பின்னர் அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த எந்தவொரு மகாநாயக்கர்களும் வடபகுதிக்கு வரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இரண்டாம் வருட மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான செயலமர்வின் வெளியீடுகள் அடங்கிய கண்காட்சி இன்று வியாழக் கிழமை மு.ப 9 மணிமுதல் பி.ப 2 மணி வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் இக்கண்காட்சியில் ஆரம்பவகுப்பு ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கல்லூரி அதிபர்ஆ. ஸ்ரீஸ்கந்த மூர்த்தி கேட்டுள்ளார். (உ-10)

## சமாதானத்திற்கு உந்துசக்தியாகவுள்ள

# இருநாட்டுப் பிரதமர்கள் மே யில் இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை க்காட்டிவரும் மாலைதீவு, தாய்லாந்து நாடுகளின் பிரதமர் கள் மே மாதத்தில் இலங்கை வரவுள்ளனர்.

மாலைதீவின் பிரதமர் மாமூன் அப்துல் கயூம் மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மே மாதம் 6 ஆம் திகதி இங்குவரவுள்ளார்.

இதேவேளை, தாய்லாந்தின் பிரதமர் தக்சின் ஷினவாத்ரா இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு மே மாதம் 14ஆம் திகதி இங்கு வரவிருக்கிறார்.

தாய்லாந்து, இலங்கையின் சமாதானப்பேச்சுக்கள் பலவற்றிற்கு இடமளித்து ஆதரவு நல்கியிருப்பதும், மாலைதீவும் இடமளிப்பதென உறுதி கூறியிருப்பதுடன் புலிகளின அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் பயணத்திற்கு கடல் விமானத்தை வழங்கி ஊக்குவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரும் மேற்படி இரு நாட்டுப் பிரதமர்களும் சமாதான நடைமுறைகளை வலுவுள்ள தாக்குவதில் செய்யக்கூடிய உதவிகள் பற்றியும், வர்த்தக முதலீடுகள் பற்றியும் ஆராயவுள்ளனர் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (உ)

# தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் தவறின் ஏ.எல்.பரீட்சையை பகிஷ்கரிப்போம்

## தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சு தலைமையில் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இன்று பிரதமர் ரணில் விக்கரமசிங்கவை சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பில், திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இன்றைய சநதிப்பில் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக இறுதியானதும், உறுதியானதுமான முடிவு எடுக்கப்படாவிட்டால,

இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த (உ/த) பரீட்சையினையும், இரண்டாம் தவணைப் பாடசாலைப் பரீட்சைகளையும் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது, வடக்கு கிழக்குப் பகுதிகளில் போட்டிப் பரீடசைமூலம் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவது, ஆசிரியர் பதவி உயர்வுகள் உட்பட பல முக்கிய விடயங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்று நேற்று முன் தினம் பிரதமர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டதாகவும் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் மாபெரும் தாசசிச் சுற்றுப் போட்டி இன்று வயாழக்கிழமை பி.ப 4.45 மணிக்கு மேற்படி கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும் மல்வம் ஞானப்பிரகாசம் விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (உ-10)

## "தாயகம்" வந்தது

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையினரால் வெளியிடப்பட்டுவரும் காலாண்டு இதழான "தாயகம்" சஞ்சிகை வெளிவந்துள்ளது. (உ-10)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவனாலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 30,31 ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. (உ-10)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை புளியங்கணடு பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 20 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 16ஆம திகதி புதன்கிழமை அடியார்களுக்கு சித்திரைக்கஞ்சி வழங்கப்படவுள்ளது. (உ-10)

## மனித உரிமை மீறல்களுக்காக பத்து இலட்சம் இழப்பீடு

### அரசு வழங்கியது

(கொழும்பு)

இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களிலும் பொலிஸாரின் அடிப்படை மனித உரிமை மீறல்கள் காரணமாக 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை அரசாங்கம் நஷ்ட ஈடாக வழங்கியுள்ளது.

சட்டவிரோதமாக மக்களை கைது செய்தல், அவர்களைத் தடுத்து வைத்தல், சித்திரவதைக்குள்ளாக்குதல் போன்ற செயற்பாடுகளை 19 பொலிஸார் புரிந்துள்ளனர் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தது.

இவர்களால் மேற்கொள்ளப்பட்ட இத்தகாத செயற்பாடுகள் பறறிய 7 வழக்குகள் தொடர்பாக நஷ்ட ஈட்டை வழங்குமாறு உயர் நீதிமன்ற நீதிபதிகள் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டிருந்தனர்.

இதேவேளை, மனித உரிமை ஆணைக்குழுவின் உறுபபினரான அன்ரனி இம்மானுவேல் பெர்னாண்டோ சிறைச்சாலை அதிகாரிகளினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வைத்திய அறிக்கையை இருவார காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறும் உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (உ-8)

# வெலிக்கடை, மகஸின் சிறைக்கைதிகள் 900 பேர் களுத்துறைக்கு மாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைச்சாலைகளில் தடுத்த வைக்கப்பட்டிருக்கும் 900 கைதிகள் இன்று களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையினை சிறைச்சாலைத்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

வெலிக்கடை மகஸின் சிறைச்சாலைகளில் தற்போது நிலவும் இடப்பற்றாக்குறை காரணமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரதிச்சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரா எக்க நாயக்கா தெரிவித்துள்ளார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் 64 கைதிகள் மாத்திரமே தடுத்துவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# வட-கிழக்கு உள்ளூராட்சி தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டி

(கொழும்பு)

வ்டக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி தேர்தல்களில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தனியாக போட்டியிடுவதென்று தீர்மானித்துள்ளது.

நட்சத்திரம் சின்னத்திலேயே தமது கட்சி போட்டியிடவிருப்பதாக கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியூகுணசேகர தெரிவித்துள்ளார்.

கட்சியின் அரசியற் குழு மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளதாகவும், இப்பொழுது மாவட்ட அமைப்பாளர்களுடன் கலந்தாலோசித்து வேட்பாளர் பட்டியல்களைத் தயாரித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## மகேஸ்வரன் பரிந்துரையில்

# பாதிக்கப்பட்டோர்க்கு புனர்வாழ்வு உதவி

(யாழ்ப்பாணம்)

உசன் இந்து இளைஞர் மன்றத்திற்கு இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனால் வழங்கப்பட்ட உதவித் திட்ட நிதியில் ஒரு பகுதி பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த வகையில், கொக்குவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த வே. மகாதேவன் என்ற இரு கைகளுமற்ற, வாய் பேச முடியாத இளைஞருக்கு மாதம் ஆயிரத்து 500 ரூபாய் படி ஒரு வருடத்திற்கு உதவி நிதி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இவ்வாறான பணிகளில் ஈடுபடுமாறு சமய நிறுவனங்களைஅமைச்சர் மகேஸ்வரன கேட்டுள்ளார். (உ-4)

# ரோக்கியோ மாநாட்டு ஏற்பாடுகள்யாவும் பூர்த்தி

## ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள உதவும் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் மாநாடு எதிர்வரும் ஜுன்மாதம் 9,10 ஆம் திகதிகளில் ஜப்பானில் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் செச்சிரே ஹட்சுகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நிதி உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டையடுத்து, முதற் கட்டப் பேச்சுவார்த்தையின் 8 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை ஜப்பானில் நடைபெறும்.

அத்துடன், சமாதான முன்னெடுப்புக்கள் மூலம் கிட்டும் இந்நிதியுதவி வடக்கு - கிழக்கிற்கு மட்டுமல்ல முழு நாட்டையும் அபிவிருத்து செய்ய உதவும் என்றார். (உ-10)

## இறுதி இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீடசைக்குத்தோற்றவுள்ள மாணவர்களுக்கான இறுதி இலவசக்கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மு.ப8.30 மணிமுதல் பி.ப 4.30 மணி வரை யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பப்பாடசாலையில் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேல் மாகாண ஆசிரிய ஆலோசகர்களால் நடத்தப்பட்வுள்ள இக்கருத்தரங்கில ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-10)

# பக்தாத்தை முற்றாகக் கைப்பற்றும் முயற்சிக்கு ஈராக்கியரின் நிலக்கண்ணிகள் பெருந் தடை

## கூட்டுப்படை மீட்ட பகுதிகளில் உள்ளூர் மக்களின் சூறையாடல் அதிகரிப்பு

## அதிபர் சதாம் பற்றி தகவல் இல்லை

(பக்தாத்)

**ஈராக்கின் பெரும் பகுதியையும் தம் வசப்படுத்தியுள்ள கூட்டுப்படையினர் இப்பொழுது பக்தாத் நகரை முழுமையாக கைப்பற்றுவதற்கான முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

**கூட்டணிப் படைகளின் கவனம் முழுவதும் இப்பொழுது பக்தாத்தின் மத்திய பகுதியை குறிவைத்திருப்பதாகத் தெரிகின்றது.**

டைகிரிஸ் நதியின் மேற்குக் கரைப் பகுதியை முற்றாகத் தம்வசம் கொண்டு வந்துள்ள அவர்கள் நதியின் கிழக்குப் பிரதேசத்தைக் கைப்பற்ற முயன்று வருவதாக கூறப்படுகின்றது.

கூட்டுப்படைகளின் முன்னேற்றத்தில் இப்பொழுது கண்ணிவெடிகளாலும் வழக்கத்துக்கு மாறான தடைகளாலும் வேகம் குறைந்து காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

*சதாம் எங்கே?*

இதற்கிடையில் ஈராக்கின் அதிபர் சதாம் ஹுசைனின் நிலைமை பற்றி தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. அவர் உயிருடன் இருக்கிறாரா? இருந்தால் எங்கிருக்கிறார் என்ற தகவல் பற்றி ஒரு தரப்பிலிருந்தும் உறுதியான தகவல் இல்லை. ஆனால் அந்தத் தாக்குதலிலிருந்து அவர் காயமின்றி தப்பிவிட்டதாகவே கருதப்படுகின்றது.

நேற்று முன்தினம் அவர் இருந்த இடம் பற்றி இரகசியத் தகவல் கிடைத்து கூட்டுப்படை அந்த இடத்தின் மீது விமானக் குண்டுகள் வீசிய போது அவர் காயமுற்றாரா என்பது பற்றி ஈராக்கிய . தரப்பிலிருந்தும் எதுவும் வெளியிடப்படவில்லை.

*ஐ.நா.வின் பங்கு*

அதிபர் சதாமின் அரசு வீழ்ச்சியுற்றதன் பின்னர் ஏற்படுத்தப்படும் அரசின் செயற்பாடுகளில் ஐ.நா.விற்கு முக்கிய பங்கு இருக்க வேண்டும் எனபதில் அமெரிக்க அதிபர் புஷ்ஷும், பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரும் கருத்து ஒற்றுமை வெளியிட்டிருக்கின்றனர்.

இதற்கிடையில் கூட்டுப்படைகளினால் தம்வசப்படுத்தப்பட்டுள்ள பல பகுதிகளிலும் உளளூர் வாசிகளின் கொள்ளையடிப்பு தீவிரமடைந்துள்ளன. போரில் ஈடுபட்டுள்ள படைகளில் தலையிட்டு தடுப்பது சாத்தியமில்லாதிருபபதாகவும் கூறப்படுகின்றது.

கண்ணிவெடிகள் வைக்கப்பட்டிருப்பதால் பக்தாத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான அமெரிக்கப் படைகளின் முயற்சி வேகம் குறைந்திருக்கின்றது என்று நிருபர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்று பக்தாத்தில் ஆங்காங்கே விட்டுவிட்டு டாங்கிகள் மூலமான தாக்குதலும் துப்பாக்கிச் சண்டையும் நடைபெற்றன. பலமுனைகளில் இருந்து ஈராக்கியத் தலைநகருக்குள் நுழைய அமெரிக்கப்படைகள் முயன்று வருகின்றன.

ஈராக்கியப் படைகளின் எதிர்ப்பில் ஒரு அமெரிக்கப்படை வீரர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். நகரின் தென்மேற்குப் பகுதியில் சதாம் ஹுசைனிற்கு விசுவாசமான சிறப்பு குடியரசு காவல் படையின் தலைமையகத்தை அமெரிக்க அதிரடிப்படைகள் தாக்கியுள்ளனர்.

தெற்கு ஈராக்கில் நேற்று முன்தினம் பரவலாகக் கொள்ளையடிக்கப்பட்டது. இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தாலும் காவல் பணிகளிற்கான ஆள்பலம் தம்மிடம் இல்லையென்று பிரிட்டிஷ் படையினர் கூறுகின்றனர்.

சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகவும், உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

*அமைதி?*

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் ஈராக்கில் தாக்குதல் ஆரம்பித்து 21வது தினமான நேற்று தலைநகர் பக்தாத்தில் அமைதி நிலவுவதாக அங்கிருக்கும் பி.பி.ஸி. தொலைக்காட்சி செய்தியாளர் தெரிவித்தார்.

*அமெரிக்கா கவலை*

இதேவேளை, ஊடகவியலாளர்கள் சிலர் உயிரிழந்ததனை அடுத்து அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம பேச்சாளர் தமது கவலையினை தெரிவித்துள்ளார். (பி-9)

## ஒளிப்பதிவாளர் கொலை; அல்ஜெஸீரா வெளியேறுகிறது

(பக்தாத்)

தமது ஒளிப்பதிவாளர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து அல்ஜெஸீராத் தொலைக்காட்சி தனது நிறுவன ஊழியர்களை ஈராக்கில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அந்தத் தொலைக்காட்சி தெரிவித்திருக்கின்றது.

நேற்று முன்தினம் அமெரிக்காவின் விமானத்தாக்குதலின் காரணமாக அல்ஜெஸீராத் தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்தார்.

இவ்வாறான செயல்கள் தொடராத வண்ணம் தடுக்கும் முகமாக தாங்கள இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

இதேவேளை அமெரிக்கா ஊடகவியலாளர்கள் தங்குமிடங்களை நோக்கி தாக்குதலை நடத்துவதாக, ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு அமைப்புக் குற்றம் சாட்டியுள்ளது. இது ஜெனீவா சாஸன நியமங்களுக்கு விரோதமான செயல் என்றும் அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. (பி-9)

## இஸ்ரேல் தாக்குதலில் 5 பலஸ்தீனர் பலி

(கெய்ரோ)

இஸ்ரேலிய விமானத் தாக்குதலினால் 5 பலஸ்தீனர்கள் உயிரிழந்தார்கள். 47 பேர் காயமடைந்துள்ளனர்.

காஸாப் பகுதியில் உள்ள கைற்றோன் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையில் இருந்து வரும் முறுகல் நிலையைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வழங்கிய சில மணித்தியாலங்களிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (பி-9)

## சார்ஸ் பரவியமைக்கு கரப்பான் பூச்சி காரணம்?

(பெய்ஜிங்)

உலகை அச்சுறுத்தி வரும் சார்ஸ் காய்ச்சல் கரப்பான் பூச்சி மூலமாக வேகமாகப் பரவியிருக்கலாம் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். சீனாவில் தெற்குப் பகுதியில் ஆரம்பித்த இந்தக் காய்ச்சல் வேகமாக அந்தப் பகுதியில் பரவியதாகவும் இந்தக் காய்ச்சலுக்குக் காரண நோய்க்கிருமி கரப்பான் பூச்சி மூலமாகவே பரவி இருக்கலாம் என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

ஏற்கனவே உலகெங்கிலும் 98 பேர் இந்தக் காய்ச்சலால் உயிரிழந்து விட்ட நிலையில்,இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சீனா அறிவித்திருக்கின்றது. (பி-9)



## இன்சாட்-3 பயணம் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இன்சாட்-3 செயற்கைக் கோள் செலுத்தப்படுவது பிற்போடப் பட்டுள்ளது.

பிரஞ்சு கயானாவிலிருந்து இந்த இந்திய செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தப்படவிருந்தது. (பி-9)

## பூமி அதிர்ச்சி

(புதுடில்லி)

இந்திய அஸாம் மாநிலத்தில் நேற்று முன்தினம் இரவு பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

இந்திய நேரப்படி இரவு 10.25 மணியளவில் இந்தப் பூமி அதிர்ச்சி நிகழ்ந்தது. (பி-9)

WORLD NEWS உலக தரிசனம்

## அகமது சலாபி ஈராக்கின் புதிய அதிபராவார்?

(லண்டன்)

ஈராக்கின் புதிய அதிபராக அகமது சலாபி என்பவரை நியமிக்க அமெரிக்கா முடிவெடுத்துள்ளது. இதற்காக அவரை விமானம் மூலம் ஈராக்கின் தென்பகுதிக்கு அமெரிக்கப்படையினர் அழைத்து வந்துள்ளனர். அமெரிக்காவுக்கு மிகவும் நெருக்கமானவர் சலாபி. ஷியா பிரிவைச் சேர்ந்த இவர், ஈராக் தேசிய காங்கிஸ் தலைவராக இருந்து வந்தார். அதிபர் சதாமுக்கு எதிராகச் செயற்பட்டதால் இதுவரை தலைமறைவாக இருந்து வந்தார்.

ஈராக் விடுதலை அமைப்புக்குத் தலைமையேற்று அமெரிக்கப்படையினருக்கு ஆதரவாகச் செற்பட்டு வந்தார். 600 வீரர்கள் இவரது தலைமையின் கீழ் இயங்கிவந்தனர். இவர்கள் அனைவரும் அமெரிக்க இராணுவத் தளபதிகளில் ஒருவரான டோமி பிராங்க்ஸ் கீழ் பணியாற்றி வந்தனர்.

ஈராக்கின் தென்பகுதியிலும் வட பகுதியிலும் ஈராக் விடுதலைப் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். ஈராக்கில் மனிதாபிமான உதவிகளை வழங்குவது, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவது, சதாமின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நிர்வாகத்தை சீர்ப்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்வார்கள் என ஈராக் தேசிய காங்கிரஸ் அறிவித்துள்ளது.

ஈராக்கில் எப்பதவியையும் வகிக்க நான் விரும்பவில்லை. ஈராக்கை விடுவித்த பின்னர் என்பணி முடிந்து விட்டதாகவே கருதுவேன் என்று சலாபி கூறியுள்ளார். ஆனால் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகமும் ஈராக் தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களும் சலாபிதான் ஈராக் அதிபராக வர வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர். மதச் சார்பற்ற முற்போக்கு சிந்தனை கொண்ட ஜனநாயகவாதி சலாபி என்றும் அவர்கள் பாராட்டுகின்றனர்.

எனினும் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகமும் அமெரிக்க உளவுத்துறையும் அவரை விரும்பவில்லை. நீண்டகாலம் ஈராக்கை விட்டு வெளியில் இருந்தவர் சலாபி. எனவே அவருக்கு ஈராக்கை நிர்வகிக்கும் திறமை இருக்குமா என்ற கேள்வியை எழுப்புகின்றன.

ஈராக்கில் போருக்குப் பின்னர் அந்நாட்டின் தற்காலிக நிர்வாகியாக அமெரிக்காவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜே கார்னர் செயல்பட ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அவருக்குத் துணையாக தனது நாட்டைச் சேர்ந்த டிம் கிராஸ் என்பவரை நியமிக்க பிரிட்டன் முடிவெடுத்துள்ளது.

தெற்கு ஈராக்கிலுள்ள உம் கஸார் பகுதியில் மனிதாபிமான உதவிகளை ஒருங்கிணைக்கும் பணியை டிம் கிராஸ் தற்போது மேற்கொண்டு வருகின்றார். (பி)

## தப்பிச் செல்வது பற்றி ஆராயும் போது கூட்டணி குண்டுகள் விழுந்தன

### சதாமும் மகன்களும் என்ன ஆனார்கள்?

(பக்தாத்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், அவரது மகன்கள் உதய், குசாய் ஆகியோர் தங்கியிருந்த மாளிகை மீது அமெரிக்கா 2000 பவுண்டு எடைகொண்ட குண்டையும் இதர குண்டுகளையும் வீசியது. இதில் சதாம் கதி என்னவென்று தெரியவில்லை.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்த 20வது நாளான செவ்வாய்க் கிழமை இச்சம்பவம் நடந்தது.

சதாமும் அவரது மகன்களும் பக்தாத்தில் பதுங்கியிருக்கும் தகவலை ஈராக் உளவாளிகள் மூலம் அமெரிக்கப் படையினர் தெரிந்து கொண்டனர்.

பக்தாத் நகரின் மேற்குப் பகுதியில் அல்-மன்சோர் பகுதியிலுள்ள ஒரு மாளிகையில் சதாமும் அவரது மகன்களும் இராணுவ தளபதிகளுடன் ஆலோசனை நடத்திவருவதை உளவுக் கருவிகள் மூலம் இடைமறித்து அமெரிக்கப்படையினர் கேட்டறிந்தனர்.

பக்தாத்தை அமெரிக்கா கைப்பற்றினால் அடுத்த வினாடியே அங்கிருந்து தப்பிச் செல்வது குறித்து அவர்கள் நடத்திய ஆலோசனையும் அமெரிக்கப் படையினருக்குத் தெரியவந்தது.

உடனடியாக அமெரிக்காவின் பி-1 வகை போர் விமானம் விரைவாகச் செயற்பட்டு செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அந்த மாளிகை மீது குண்டுகளை வீசியது. அப்போது வீசப்பட்ட 2000 பவுண்டு குண்டு பதுங்குகுழிகளையும் மறைவிடங்களையும் தரைமட்டமாக்கியது.

குண்டு வீச்சின் காரணமாக அப்பகுதியில் 60 அடி ஆழத்துக்கு மிகப் பெரிய பள்ளம் ஏற்பட்டது. அத்துடன் அங்கிருந்த 3 முக்கிய கட்டடங்களும் தரைமட்டமாயின. இடிபாடுகளில் இருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்த குண்டு வீச்சுத் தாக்குதலில் சதாமும் அவருடன் இருந்தவர்களும் பலியாகியிருக்கக் கூடும் என்று அமெரிக்க அதிபர் மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இந்தக் குண்டுவீச்சுத் தாக்குதலிற்கு முன்பே சதாம் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டதற்கான சாத்தியக் கூறுகளையும் மறுப்பதற்கில்லை என்றார் அவர். (பி)

# புலிகளின் முதல்தாக்குதல் 'சாள்ஸ் அன்ரனி' சிறப்புப்படையணி 12வது ஆண்டைக்கடக்கிறது

இந்த சமாதான சூழல் தொடருமா...? இது தான்இன்று அனைவரது கேள்வியாக எழுந்து நிற்கின்றது. இதன் பதிலுக்கப்பால்,இன்றைய நாட்கள் இனிமையாகவே கழிகின்றன. புதிய புதிய வரவுகள் மக்களின் மனங்களை சற்று வருடி விடுகின்றது. போருக்குள் வாழ்ந்த எம் மக்கள் சற்று நிமிர்ந்து நிம்மதி பெருமூச்சை வடுகின்றனர்.பாதை திறப்பு, பொருளாதார தடை நீக்கம்,இரவு பகல் நடமாட்டம்,நாடு முழுவதும் சென்று வருவதற்கான அனுமதி என பல்வேறு சூழல்களும் உருவாகி மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ளது இந்த சமாதானம் .

இந்த சமாதானத்தை பிரசவித்தது யாா...?அல்லது.... எது...?ஆம் அதுதான் எமது இராணுவ சமநிலை ஆகும். கொஞ்சம் கொஞ்சமாக நாம் வாழ்ந்து வந்த நிலத்தை,சொத்தை உடமைகளை இழந்தது மட்டுமன்றி இம் மண்ணில் சுதந்திரமாக கௌரவமாக வாழப்பிறந்த எம் மக்களையும், அந்த மக்களின் உரிமைக்காக போரிட்டு களத்தில் நாம் இழந்த ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் இழப்பிற்கு பின் உருவானதுதான் எமது இராணுவபலம்.அல்பிரட் துரையப்பா தொடக்கம்,தீச்சுவாலை வரை எமது இராணுவ பலத்தை நிரூபிக்க சிங்கள அரசுடன் போரிட வேண்டியிருந்தது.

## தீச்சுவாலை

ஈழப்போரின் வளர்ச்சிப் பரிணாமத்தின் உச்சக்கட்டமாக யாழ்ப்பாண வீழ்ச்சியும் வன்னியின் போா எழுச்சியும் ஓயாத அலைகளை உருவாக்கி விட்டன. அலைகளில் அடங்க மறுத்த சிங்களத்திற்கு 'தீச்சுவாலை' எதிர்ச் சமர் ஒருபலமான அடியைக்கொடுத்தது.ஆனையிறவை மீண்டும் கைப்பற்றி சிங்கள இராணுவத்திற்கு மனோபலத்தை அதிகரிக்



கச் செய்ய எண்ணிய சந்திரிகா அரசுக்கு தீச் சுவாலை முறியடிப்புச் சமர் மீள முடியாத அவமானத்தை கொடுத்து பேச்சுவார்த்தை மேசைக்கு தளளிவிட்டதை நாம் மறந்து விடமுடியாது.

ஆனையிறவை இழந்து ஒரு வருடம் சென்ற பின்னும் அதனைக் கைப்பற்றிய பின்பே புலிகளுடன் பேசுவது என்ற இறுமாப்பில் அரசு தரித்து நின்றது.நோர்வேயின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்த தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் அறிவித்ததும் அதனைப்பயன்படுத்திய அரசின் படைகள் குடாநாட்டில் எம் வசம இருந்த பல்வேறு இடங்களையும் கைப்பற்றி பெருமிதம் கொண்டதும் பின் ஆறு நாட்களில் ஆனையிற



வைப்பிடித்து கொடியேற்றுவோம் என்ற கனவுடன் வந்த தீச்சுவாலை படையினரை,அவர்கள் உருவாக்கி எரியவிட்ட தீக்குள்ளேயே அவர்களை கருக விட்டு சின்னாபின்னமாக்கி இரண்டு நாட்களில் வந்த சுவடு தெரியாமல் ஓட வைத்ததும் நாம் அறிந்த விடயமாகும்.

## ஏப்ரல் பத்தாம் நாள்

ஆகவே இவ்வாறான வெற்றிகளின் அறுவடையால் உருவாக்கம் பெற்ற இராணுவ சமநிலை தான் இன்றைய எமது அரசியல் வெற்றிக்கு அடிப்படைக்காரணம். இப்படியான வெற்றிகளைக் குவித்துக் கொண்டு இலட்சியம் நோக்கிபோராடிக் கொணடிருக்கும் விடுதலைப் புலிகளின் படையணிகளுள் முதன்மையானது தான் லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் எழுதுமட்டுவாள மண்ணில் அது அரங்கேறியது. தலைவர்அவர்களால் முதல் மரபு வழித் தாக்குதல் படையணி உருவாக்கம் பெற்றது. சுமார் 1500 பேரைக் கொண்ட இப்படையணியானது.தமிழீழத்தின் எந்தப்பகுதிக்கும் சென்று தாக்குதல் நடத்தி சாதனைபடைக்கக் கூடியதாகும்.எனவே எந்த ஆண்டிலும் வருகை ஏப்ரல் 10 எமக்கு சிறப்பான நாளாகவே அமைகிறது. அதில் குறிப்பிட்ட இரண்டு ஆண்டை மட்டும் தருகின்றோம்.

2000ஆம் ஆண்டு ஏப்ரல் 10இல் எமது படையணி 9வது ஆண்டை நிறைவு செய்யும் போது இத்தாவில சண்டையின் போது எதிரியால் மேற்கொள்ளப்பட்ட 'வலுச்சக்கர' இராணுவ நடவடிக்கையை முறியத்தோம்... வெற்றியும்கண்டோம். அதன் பின்2002ஆம் ஆண்டு ஏப்ரல் 10ல் எமது தேசியத்தலைவர் அவர்கள உலக பத்திரிகையாளர் மாநாட்டை நடத்திஉலகிற்கு எமது விடுதலைப் போரை உணர்த்தினார்.

இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய ஏப்ரல் 10ல் எம்மையும் பிரசவித்த எம் தலைவனுக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

## லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி

பிறந்த முதல் மாதத்திலேயே எமது படையணியின் முதல் சிறப்புத் தளபதியும்,எமது படையணியின் தந்தையுமான கேணல் பால்ராஜ் அவர்களின் வழி நடத்தலில்'வன்னி விக்ரம'இராணுவ நடவடிக்கையை எதிர் கொண்டு வெற்றிவாகை சூடி தலைவரின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்திய இப்படையணி தனது 10 வது ஆண்டில் தீச்சுவாலையை எதிர் கொண்டு வெற்றி பெற்று தலைவரிடம் பாராட்டையும் பெற்றுக் கொண்டது.

தமிழீழ மண்ணிலே முதல் வீரச் சாவடைந்த பெருமைக்கும்,புலிகளின் மரபைக்காத்து களத்திலே வித்தியாசமான முறையில் வீரச் சாவடைந்த பெருமைக்கும் விடுதலைப் புலிகளின் முதற் தாக்குதல் தளபதி என்ற பெருமைக்கும் இலக்கணமாய் இருந்தது மட்டுமன்றி இத் தனைக்கும்மேலாக தலைவரின் இதயச் சந்திரனாக அவரது இதயத்தில் நீங்காத இடம் பிடித்துவீரத்திற்கும், ஈகத்திற்கும்,இயக்கவிசுவாசத்துக்கும் முன்னுதாரணமாக திகழ்ந்த திருமலை மண் ஈன்ற நாயகன் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்ற மாபெரும் வீரனின் நாமத்தைக் கொண்ட இப் படையணி விடுதலைப்புலிகளின் முதல மரபு வழித்தாக்குதல் படையணி ஆகும்.

'இங்கே நாங்கள் செய்த சண்டை மூலம் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியை எதிரிக்கு நன்கு தெரியும்'

'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி என்றால் எதிரிகள் நடுங்குவார்கள்'

'இனி சாள்ஸ் அன்ரனி பிறந்த மண்ணிலும் நீங்கள் சண்டை பிடிக்

**ஏ.காண்டீபன்**

கப்போகின்றீர்கள்'

'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி அங்கே வந்து இருக்கின்றது என எதிரிகள் அஞ்சும் அளவிற்கு உங்களுடைய செயற்பாடுகள் இருக்க வேண்டும்'.

இது படையணியை 1995ஆம் ஆண்டு திருமலை நோக்கி வழி அனுப்பிவைத்த போது தலைவர் அவர்கள் குறிப்பிட்ட வார்த்தைகள்.

தலைவர் அவர்களின் வார்த்தையில் எதிரிகள் கலங்கிப் போனது உண்மை. 'தயங்காதே முன்னேறு' என்று கோஷமிடும் எதிரிப்படைகள் தயஙகி நின்றுசெய்வதறியாது

## சாதனை அணி

மேலும் இப்படையணி தொடர்பாக அதன் சிறப்புத்தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் கூறுகையில், 'தலைவரின் நம்பிக்கையினை கருத்தில் கொண்டு சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியை ஒரு சாதனை யணியாக படையணியின் பெயரைக் கேட்டாலே எதிரி அஞ்சும் அளவிற்கு படையணியைஉருவாக்க வேண்டும் என்றுஎனக்குள் ஓர் இலட்சியத்தை ஏற்படுத்தியிருந்தேன்' எனக் கூறினார்.

'போராட்டத்தின் நெருக்கடியான களச்சூழல்களை வெற்றி கொள்வதற்காகத்தான் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணிஉருவாக்கப்பட்டது'.

எனக் கூறிகின்றார் அதன் முன்னாள் சிறப்புத்தளபதி கேணல் தீபன்.

இவ்வாறாக இந்த படையணியை வைத்து சண்டை செய்த எந்தக் கட்டளைத்தளபதியும் அதன் சிறப்பைக் கூற தவறவில்லை. அன்றைய தாக்குதல் தளபதியான சாள்ஸ் அன்ரனிக்கு எதிரி எவ்வாறு பயந்தானோ அதே போல் அவர் நாமம் கொண்ட இப்படையணியும்,எதிரிக்கு இன்னும் சிம்மசொப்பனமாகத்தான் உள்



ளது. இந் நிலைமையை உருவாக்கி போரரங்கில் எமக்கு பெருமையும் பல இராணுவ வெற்றிகளையும் பெற்றுத் தந்து இப்படையணியின் வெற்றிக்காக,வளர்ச்சிக்காக 1055 உன்னதமான வேங்கைகளை மாவீர்களாக இம் மண்ணுக்கு கொடையாக்கியுள்ளோம்.


இன்றைய சமாதானச் சூழல் நீடித்து எம் மக்களுக்கு ஒரு நிம்மதியான, சுதந்திரமான,கௌரவமான வாழ்வுகிட்ட வேண்டும்.தமிழன் உரிமையுள்ள மனிதனாக வாழ வேண்டும்.அந்த உரிமையை சிங்களம்தர மறுத்தால்,மீண்டும் இராணுவ மேலாதிக்கம் எம்மண்ணில் சதிராட்டம்போட்டால்,விடுதலைப்புலிகள் இதற்கெதிராக போராடுவர்.அங்கே சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையணியும களமாடும். தலைவனின் ஆணை நிறைவேறும். உலக சரித்திரம் புதிய வரலாறு ஒன்றை பதிவாக்கும் அதிலும்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி கைதட்டும்.

**'இயலாத ஒன்று இருக்காது எமக்கு**



யாழ்.இடைக்காடு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலர் எஸ். ஸ்ரீனிவாசன் போட்டியில் வெற்றி பெற்ற ஒருவருக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்



கனடாவில் உள்ள சி. ஐ.ரி.நிறுவனத்தின் சார்பில் டாக்டர் வி.ரி. வசந்தகுமார் கணனி சம்மந்தமான பெறுமதியான 59 புத்தகங்களையும், கணனி ஒன்றையும் யாழ். அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்துக்கு அன்பளிப்பு செய்த போது எடுக்கப்பட்ட படம்

# மீள்குடியமர்வு கொடுப்பனவு கோரி அடையாள உண்ணாவிரதம்

## தயாராகின்றனர் யாழ்.முஸ்லிம்கள்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வுக் கொடுப்பனவு விடயத்தில் பாரபட்சம், இழுத்தடிப்பு என்பன தொடாந்தால் யாழ்.பிரதேச செயலகம் முன்பாக ஒரு நாள் மறியல் போராட்டம் செய்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்கப்போவதாக யாழ்.முஸ்லிம் பொது அமைப்புக் குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேற்படி குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

வடகிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்த யாழ்.முஸ்லிம் மக்கள் 12 ஆண்டுகளுக்குப் பின் ஏ-9 பாதையூடாக மீள்குடியேறியுள்ளனர்.

இக்குடும்பங்களுக்கு இன்று வரைக்கும் மீள்குடியேற்றக் கொடுப்பனவான 25 ஆயிரம்ரூபா இது வரைக்கும் வழங்கப்படவில்லை. மற்றும் எந்த நிறுவனத்தாலும் எதுவித உதவியும் வழங்கப்படவில்லை.

முஸ்லிம்கள் இவ்விதம் புறக்கணிக்கப்படுவது ஏன்? இது சம்பந்தமாக யாழ்.பிரதேச செயலக அதிபர் முக்கிய கவனம் எடுத்து குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

தவறும் பட்சத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள் பிரதேச செயலகத்திற்கு முன்பாக மிக விரைவில் ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் இருக்க தீமானித்துள்ளோம் என்றுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். மாவட்ட எம்.பியும், இந்து கலாசார அமைச்சருமான தி.மகேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-10)

# நல்லொழுக்கம், பண்பாடு நிலைபெற அறநெறிப் பாடசாலை உதவுகிறது

## செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுகன்

மானிட அமைப்பில் உடலிலும் உயர்ந்தது உள்ளம் என்பதை நாம் சிந்தையிற் கொள்ள வேண்டும். உடலில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அதனால் மனிதன் கீழோனாகக் கருதப்பட மாட்டான். ஆனால் மனதில் பண்பும் நேர்மையும் நற்சிந்தனைகளும் உயர்ந்த எண்ணமும் அமையப் பெறாதிருப்பின் கீழோனாகக் கருதப்படுவான் என்பது திண்ணம்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலைப் பரிசளிப்பு விழா மற்றும் மருதடியான் மலர் 2003 நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் மேற்கண்டவாறு கூறினார்.

அறநெறிப் பாடசாலை அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மனதை மாண்புறச் செய்யுமளவிற்கு மனிதன் மேலோனாகின்றான். எனவே அறநெறிக்கல்வி நல்லொழுக்கம், பண்பாடு என்பவற்றை சிறுவர்கள் மனதில் பதியச் செய்ய அறநெறிப் பாடசாலை உறுதுணை புரியும் என்றார்.

அடுத்துஉரையாற்றிய எழுத்தாளர் சிற்பி சி.சிவ.சரவணபவன்,

இன்றைய காலத்திலே அறநெறிச் சிந்தனைகளை மதித்து நடந்து வருபவர்களும் சிந்திப்பவர்களும் அருகி வருவது பலருக்கும் கவலை அளிக்கின்ற விடயமாகும்.

காலத்தின் தேவையறிந்து மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலையை நடாத்துவது பாராட்டத்தக்கது. இன்றைய இளைய தலைமுறையினரை நல் வழிப்படுத்துவது சைவ சமய நிறுவனங்களின் முக்கியமான பணியாகும் என்று குறிப்பிட்டார்.

இந்து சமய விவகார உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (உ)

## சமாதான நல்லெண்ண விஜயம்

(யாழ்ப்பாணம்)

நுகேகொட பிரதே இளைஞர் மன்றத்தின் அழைப்பை ஏற்று யாழ். பிரதேச இளைஞர் சம்மேளனப்பிரதிநிதிகள் 25 பேர் எதிர் வரும் 24ஆம் திகதி நுகேகொட செல்லவுள்ளனர்.

சமாதான நல்லெண்ண விஜயமாக அங்கு செல்லும் இவர்களுக்கான சகல செலவுகளையும் நுகேகொட பிரதேச இளைஞர் மன்றம் ஏற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.(உ-4)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின்யாழ் அலுவலகத்துக்கு விசாரணை உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

45வயதிற்கும் உட்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

ஒரு வருட துறைசார் அனுபவமும் தமிழ்,ஆங்கில கணனி தேர்ச்சியும்மேலதிகதகமையாகக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் இல. 36கிங்ஸ்லி வீதியிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு கிடைக்கக் கூடிய வாறு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-4)

## தங்க நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கள் இரவு நாவலர் வீதியில் உள்ள ஆயுள் வேத வைத்தியர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த திருடர் அங்கிருந்துசுமார் 30 பவுண் தங்க நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (உ)

## கால் கழுவும் சடங்கு இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

சார்ஸ் வைரஸ் நோய் அச்சுறுத்தல் காரணமாக பெரிய வியாழனை ஒட்டி ரோமில் வளமையாக இடம் பெறும் பரிசுத்தவார கால் கழுவும் சடங்கு திருமுழுக்கு என்பனவும்,

அல்லேலூயா சனி திருவிழிப்பில் நடைபெறும் திருமுழுக்கும் இம் முறை இடம்பெறாது என கத்தோலிக்க திருவழிபாட்டு ஆணைக் குழுவிற்கு பொறுப்பானவர் அறிவித்துள்ளார். (உ)

## நூல்வெளியீடு

(கொழும்புத்துறை)

சா.மி. கிருபானந்தன் எழுதிய 'பூகோள மயமாதல் மூன்றாம் உலகப்பார்வை' என்ற நூல் வெளியீட்டுவிழா இன்று வியாழக்கிழமை பி.ப.4.15 மணிக்கு மனித முன்னேற்ற நடுநிலையத்தில், கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சீ. ஜி .ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-51)

## வருடாந்த உற்சவம்

(நெல்லியடி)

கரவெட்டி கிராய்பிள்ளையார்ஆலய வருடாந்தஉற்சவம் கடந்த 7 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர் வரும் 16, 17 ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது. (உ-44)

# களவாடப்பட்ட 12 சைக்கிள்கள் குடாநாட்டில் மீட்பு

## சம்பந்தப்பட்டவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் களவாடப்பட்ட ஒரு தொகுதி சைக்கிள்களை மீட்ட யாழ்.பொலிஸார் இதற்குக் காரணமான இருவரையும் கைது செய்துள்ளனர்.

கொக்குவில் தேங்காயமுனைப் பகுதியில் நேற்று முன்தினம் சைக்கிள் விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவர் குறித்த தகவல், யாழ். பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்ததையடுத்து பொலிஸார் அவ்விடம் விரைந்தனர்.

அங்கு களவாடப்பட்ட 5 சைக்கிள்களையும், ஒரு சைக்கிள் உதிரிப்பாகங்களையும் கைப்பற்றியதுடன் அவற்றைக் களவாடுவதில் ஈடுபட்டு வந்த இருவரையும், இவர்களுக்கு உடந்தையாகச் செயற்பட்ட சைக்கிள் கடை உரிமையாளர் ஒருவரையும் கைது செய்தனர்.

மேற்படி மீட்கப்பட்ட சைக்கிள்கள் கடந்த இரு வாரங்களின் முன்பு யாழ்பற்றிக்ஸ் கல்லூரி முன் வீதி மீதும், யாழ் நகரத்திலும் களவாடப்பட்டவை என்பதும்,

இவ்வாறு களவாடப்படும் சைக்கிள்கள் 2 ஆயிரம் ரூபா முதல் 3 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப் படுவதும் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, குடாநாட்டின் மற்றோர் பகுதியில் இருந்து கைது செய்யப்பட்ட சைக்கிள் கடை உரிமையாளரின் தகவலின் பேரில் 6 சைக்கிள்களை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

இவை அனைத்தும், சைக்கிளைப் பறிகொடுத்தவர்களின் அடையாளம் காட்டுதலுக்காக யாழ். பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.(உ-7,4)

# சிறாரின் ஆங்கில அறிவு மேம்பாடு கருதி ஆரம்பமாகிறது யாழ்.கச்சேரி வளாகம்

பிரித்தானிய வர்த்தகக்கல்லூரி தனது கல்விச் செயற்பாட்டை விரிவாக்கும் வகையில் சென்ற மார்ச் மாதம் தனது முதலாவது வளாகமாகிய யாழ்.நகர வளாகத்தை (Jaffna City Campus) 140, கோயில் வீதியில் ஆரம்பித்துள்ளது. மாணவர்களுடைய நன்மை கருதி இக்கல்லூரி மற்றுமொரு யாழ். கச்சேரி வளாகத்தை (Jaffna kachcheri Campus)174, கண்டி வீதியில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த யாழ். கச்சேரிவளாகமானது 2 வயது தொடக்கம் 5 வயது வரையிலான சிறுவர்களுக்காகவும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்காகவும் ஆங்கில மொழியை கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வளாகமானது சர்வதேச தரம் வாய்ந்ததாக விளங்க இருப்பதோடு வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட நவீன கற்பித்தல் உபகரணங்களின் உதவியுடன் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு வழங்கப்படும் பயிற்சி நெறியின் சிறப்பம்சமாக, சிறுவர்களுக்கு ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுவதுடன் கட்டாய பாடமாகத் தமிழும் கற்பிக்கப்படவுள்ளமை அமைகிறது.

மேலும் டாக்டர் மரியாவின் Montessori கற்பித்தல் முறையுடன் கனேடிய ஆரம்பக் கல்வி முறையும் பின்பற்றப்படவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன், பிரித்தானிய வர்த்தகக் கல்லூரியில் மேற்குறிப்பிடப்பட்ட கற்பித்தல் முறைகளில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் குழாத்தினால் கற்பிக்கப்படவிருப்பது சிறப்பம்சமாகும்.

இங்கு பின்வரும் பாடநெறிகளுக்கான வகுப்புகள் மாணவர்களுக்கென நடாத்தப்படவுள்ளன.

| மாணவர் பிரிவு | வயதெல்லை | நேரம் |
|---|---|---|
| Play Group | 2+-3+ | காலை 8.30-பி.ப.11.30 வரை |
| Montessori School | 3+-4+ | காலை 8.30-பி.ப.12.30 வரை |
| Pre-School | 4+-5+ | காலை 8.30-பி.ப.12.30 வரை |

மேற்குறிப்பிடப்பட்ட பாடநெறிகள் இவ்வளாகத்திலே திங்கள் முதல் வெள்ளி வரை நடைபெறவுள்ளன. மேலும் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய தூர இடங்களிலிருந்து கற்க வரும் சிறுவர்களுக்காக இவ்வகுப்புகள் சனிக்கிழமைகளில் காலை 9.00 தொடக்கம் மாலை 4.00 வரை நடைபெறவுள்ளன. இப்பிரிவைச் சார்ந்த சிறுவர்களுக்கு திங்கள் முதல் வெள்ளி வரை நடத்தப்படும் பாடநெறிகளை ஒரே நாளில் கற்பிப்பதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களை விட பாடசாலை செல்லும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில மொழி மூலம் ஆங்கில வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வளாகத்தில் இடம்பெறும் இக்கற்பித்தல் முறையின் சிறப்பம்சம் சிறுவர்களுக்கு ஆங்கில அறிவை மேம்படுத்துவதாகும். இப்பிரிவு சார்ந்த மாணவர்களுக்கான பாடநெறிகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| Level- I | - | Foundation |
| Level- II | - | Lower Intermediate |
| Level- III | - | Intermediate |
| Level- IV | - | Upper Intermediate |

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அமைக்கப் படவுள்ள புற்றுநோய் வைத்திய சாலைக் கிராமம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல.223, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயப் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இணையத்தின் தலைவர் டாக்டர் வி.தியாகராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் அரசசார்பற்ற மற்றும் அரசசார்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## "பலிக்களம்" ஆற்றுகை இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

"பலிக்களம்" திருப்பாடுகளின் ஆற்றுகை இன்று திருமறைக்கலா மன்ற அரங்கில் மேடையேறவுள்ளது.

13ஆம் திகதி வரையான நான்கு தினங்கள் மாலை 7 மணிக்கு மேடையேறும் மேற்படி ஆற்றுகையினை பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள் 1973இல் எழுதி நெறியாள்கை செய்திருந்தார்.

இவ்வருடம் அரங்கவாரிதி ஜீ.பி. பேர்மினஸ் இதனை நெறியாள்கை செய்துள்ளார்.

260 கலைஞர்கள் பங்கேற்கும் மேற்படி தவக்கால ஆற்றுகை வருடா வருடம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-51)

## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப்போட்டி

பரிசில்கள்:

1ஆம் பரிசு ரூபா 750
2ஆம் பரிசு ரூபா 500
3ஆம் பரிசு ரூபா 250

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

அனுசரணை:
* நீர்வேலி பிரம்மஶ்ரீ கு.தியாகராசசர்மா

### போட்டியின் விதிகள்

**தரம் ஒன்பதில்** இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

**கட்டுரையின் தலைப்பு :** "தாய் அன்பிற்கு நிகரேது"

* கட்டுரை 175தொடக்கம் 200 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்
### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------
பாடசாலை :------------------------
:------------------------
கற்கும் தரம் :--------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------
ஆசிரியர்

# செய்தித் துளிகள்

## ச.ச. நிலையங்களின் சமாசம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான இவ்வாண்டு சமாசத் தெரிவு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு கொக்குவில் உப. அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## பாலம் சேதமடைகிறது

(ஊர்காவற்றுறை)

யாழ்.பண்ணைப்பாலம் பராமரிக்கப்படாமையினால் பிரயாணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தீவுப்பகுதிகளுக்கான பிரதான வீதியில் உள்ள பண்ணைப் பாலம் நாளுக்கு நாள் சேதமடைந்து வருகின்றது.

மேற்படி பாலம் முற்றாகச் சேதமடைந்த பின் திருத்துவதை விட சிறுசிறு சேதங்களை திருத்தி தொடர்ச்சியாகப் பராமரிப்பதன் மூலம் பாதுகாக்க முடியும் என பிரயாணிகளால் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-75)

## பிச்சைக்காரருக்கு சமுர்த்தி நிவாரணம்

(கொழும்பு)

பிச்சை எடுப்பவர்களுக்கும் விரைவில் சமுர்த்தி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சமுர்த்தி அமைச்சர் ஆர்.பீ. சிறிசேன ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் மே மாதம் முதல் அமுல்படுத்தப்படும் என்றும், இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகமட்டத்திலும் பிச்சை எடுப்பவர்களின் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதன் பிரகாரம் 350 ரூபா, 600 ரூபா, ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் பிச்சைக்காரர்களுக்கு சமுர்த்தி நிவாரணமாக வழங்கப்படவுள்ளது. (உ-10)

## பஸ்சேவையை அதிகரிக்குக!

(ஊர்காவற்றுறை)

வேலணை சாட்டி ஊடான பஸ் சேவை அதிகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்கும்பான், செட்டிபுலம், சாட்டி ஆகிய பகுதிகளில் மக்கள் அதிகமாக மீளக்குடியமர்ந்துள்ளமையினால் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். (உ-75)

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர் மற்றும் முதியோர் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி இருப்பதுடன், சமுதாயச்சீர்கேடுகள் மலிந்து போயிருப்பதைக் கண்டித்து அண்மையில் அங்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

பள்ளிமுனைச் சந்தையில் இருந்து புறப்பட்ட இவ்ஊர்வலம், மன்னார் நகரப் பகுதியூடாகச் சென்று மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையை அடைந்தது.

அங்கு போதைப் பொருளைத் தடை செய்யும் விடயம் சம்பந்தமான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பள்ளிமுனைக்கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரத்தின் அடிப்படையில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பது தெரியவந்துள்ளது. (உ-8)

## தையல் கண்காட்சி

(கல்வயல்)

பளை-பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் பயிற்சி மற்றும் கைவினைப் பொருட்களின் கண்காட்சி மேற்படி பிரதேச கிராம அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் நாளை வெள்ளிக்கிழமை பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக பயிற்சிக் கூட மண்டபத்தில் மு.ப 9 மணி முதல் மாலை 5 மணிவரை பளைப் பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-36)

## சிவதொண்டன் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிவதொண்டன் நிலையத்தினரால் மாதாந்தம் வெளியிடப்படும் "சிவதொண்டன்" குருபூசை மலரின் பங்குனி மாத இதழ் வெளியாகியுள்ளது. (உ-10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பவளவிழாத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அனைத்து பழைய மாணவர்களையும், நலன் விரும்பிகளையும் பங்குபற்றுமாறு பாடசாலை அபிவிருத்திச் சபையும் பழைய மாணவர் சங்கமும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (வ-5)

## நடமாடும் செயலகசேவை

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இறப்பு, பிறப்பு, திருமணப் பதிவுகளுக்கான நடமாடும் செயலக சேவை, கிராம அலுவலக ரீதியாக இடம்பெறவிருப்பதாக பதில் பிரதேச செயலர் எஸ்.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

கடந்தகாலப் போர்ச்சூழல் காரணமாக மேற்படி சான்றிதழ்களைத் தொலைத்தும், பெறமுடியாது போனவர்களினதும் நன்மை கருதி அவர்களது சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-252)

## இலவச தையல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயிசேவா நிலையத்தில் இளைஞர், யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சிநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தையல் பயிற்சியைப் பயில விரும்புவோர் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (உ)

## ஏற்றுமதிக் கிராமங்கள்

(கொழும்பு)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடன் கிராமிய பொருளாதார அமைச்சு நாடெங்கிலும் 125 ஏற்றுமதிக் கிராமங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படும் வகையில் இந்த ஏற்றுமதிக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக ஒரு கிராமத்தை அமைப்பதற்கு அரசாங்கம் 10 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இக்கிராமங்களை அமைப்பதற்குப் பொருத்தமான இடங்களை அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கவுள்ளனர். (உ-8)

## 4 மீனவர்கள் விடுதலை

(சென்னை)

தனுஸ்கோடி கடற்பகுதியில் கடந்த மாதம் 21ஆம் திகதி மீன்பிடித்துக் கொண்டிருந்த போது மண்டபம் கடலோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்ட 6இலங்கை மீனவர்களில் 4 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக்கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தலைமன்னாரைச் சேர்ந்த 6 மீனவர்களும் நீதிமன்ற உத்தரவுப்படி மதுரைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அவர்களின் இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை, இவர்கள் அண்மையில் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை விசாரணை செய்த இராமேஸ்வர நீதிமன்ற நீதிபதி நான்கு மீனவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டார். படகு உரிமையாளர்களான ஏனைய இருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# ஈராக் மறுசீரமைப்பில் ஐ.நா.வின் பங்களிப்பு

## புஷ் வரவேற்கிறார்

(ஹில்ஸ்பரோ)

கூட்டுப்படைகளின் அதிரடித் தாக்குதலால் ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி முடிவுக்கு வருகிறது என்று பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் கூறினார்.

அயர்லாந்தில் ஹில்ஸ்பரோ கோட்டையில் அமெரிக்க அதிபருடன் ஈராக் போர் நிலவரம் பற்றி விவாதித்த பின் பிளேயர் இவ்வாறு கூறினார்.

அதிபர் புஷ் கருத்து வெளியிடுகையில், ஈராக்கில் புதிய அத்தியாயம் தொடங்குகின்றது. அதேநேரத்தில் மிகக் கடினமான சண்டையையும் எதிர்நோக்கியிருக்கிறோம். போரின் முடிவில் சந்தேகம் ஏதும் கிடையாது. ஈராக் அரசின் உண்மையான சொரூபத்தை உலக நாடுகள் இப்போது காண்கின்றன என்றார். ஈராக் மக்கள் எங்கள் பக்கம் திரும்புகின்றனர் என்றார் பிளேயர்.

போர் முடிந்த பிறகு ஈராக்கில் யார் ஆட்சி செய்வது, அந்த நாட்டை யார் சீரமைப்பது என்று இரு தலைவர்களும் விவாதித்தனர். மறுசீரமைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின்பங்கு என்ன என்றும், அவர்கள்விவாதித்தனர். ஐ.நா. சபையின் பங்களிப்பையும் ஈராக்கில் இடைக்கால அரசை ஏற்படுத்துவதையும் நான் ஆதரிக்கின்றேன் என்றார் புஷ். ஈராக்கில் மனிதாபினமான உதவி களை ஐ.நா.சபை மேற்கொள்ளலாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறினார். ஈராக்கில் அரசாட்சி செய்ய ஐ.நா. விருப்பம் தெரிவிக்கவில்லை என்று டொனி பிளேயரின் செய்தித் தொடர்பாளர் கூறினார். (பி)

# ரொய்டர் 'காமிராமேன்' கொல்லப்பட்டார்

(பக்தாத்)

பக்தாத்தில் அமெரிக்கப்படைகள் செவ்வாய்க்கிழமை நடத்திய குண்டுவீச்சுத்தாக்குதலில் பத்திரிகையாளர்கள் தங்கியிருந்த பாலஸ்தீன் ஹோட்டல் சேதமடைந்தது. இத்தாக்குதலில் ரொய்டர் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 5 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில் இந்தத்தாக்குதலில் தங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த டி.வி. காமிராமேன் டாரஸ் புரோட்சுக் (வயது 35) பலியாகி விட்டதாக லண்டனில் உள்ள ரொய்டர் நிறுவனத் தலைமையகம் தெரிவித்துள்ளது. இவர் உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர். வார்ஸாவை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வந்தார்.

ஸ்பெயின் நாட்டிலுள்ள தனியார் டெலிவிஷன் நிறுவனத்துக்காகப் பணியாற்றி வந்த ஜோஸ் கோஸோவுக்கு கால் மற்றும் தாடையில் காயம் ஏற்பட்டதாக அந்த நாட்டு டெலிவிஷன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன் ஹோட்டலின் 15வது மாடியில் ரொய்டர் நிறுவனத்துக்கு அலுவலகம் உள்ளது. இங்கு தான் போர்ச் செய்திகளைச் சேகரித்துவரும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் இருந்து வருகின்றனர். அமெரிக்கக் குண்டுவீச்சில் ஹோட்டலின் 14, 15 மற்றும் 17வது மாடிகள் பலத்த சேதமடைந்தன. (பி)

# தென் கிழக்கு விமானத் தளம் கூட்டுப்படையிடம் வந்தது

(பக்தாத்)

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஈராக் மீது 21வது தினமாகவும் நேற்று தாக்குதலை நடத்தினார்கள்.

பக்தாத்தின் தென்கிழக்குப்பகுதியில் உள்ள விமானத்தளத்தை அமெரிக்கக் கடற்படையினர் கைப்பற்றியிருப்பதாக ரொய்டர் செய்தி தெரிவிக்கின்றது.

இந்த நகரின் பல பகுதிகளும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஈராக்கிற்கு எதிரான தாக்குதல் முடிவடையும் தறுவாயில் இருப்பதாக அமெரிக்க இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை பக்தாத்தின் பல பகுதிகளில் தொடர்ந்தும் குண்டுச்சத்தங்கள் கேட்ட வண்ணம் இருப்பதாக சர்வதேச தொலைக் காட்சி செய்தியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.


மேலும் அமெரிக்காவின் 2 விமானிகள் காணாமல் போயுள்ளதாக அமெரிக்கச் செய்திகள் கூறுகின்றன. இவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று பென்ரகன் அறிவித்துள்ளது.

ஈராக் மீதான யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 96 அமெரிக்கப்படை வீரர்கள் உயிரிழந்துள்ளதாகவும் பென்ரகன் மேலும் தெரிவித்துள்ளது. (பி-9)


பஸ்ரா நகரத்தில் சதாம் ஹுசைனின் பழைய அரண்மனையில் பிரிட்டிஷ் படையினர்


வடக்கு ஈராக்கில் பரசூட் மூலம் யு.எஸ்.துருப்புக்கள் வந்திறங்கிய செய்தியை அறிவிக்கும் யு.எஸ்.கடற்படை வாகனம்


பஸ்ரா நகரத்துக்குள் வெற்றிகரமாக முன்னேறிய யு.எஸ். இராணுவத்தினரை வாழ்த்தும் ஈராக்கியர்



கர்பலா நகரத்தில் இராணுவ முகாமுக்கு அருகில் இரசாயன வெடிபொருட்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் பரல்கள்


பஸ்ரா நகரத்தில் பிரிட்டிஷ் ராயல் கடற்படை வீரர்கள் ரோந்து வரும் காட்சி


இரசாயன வெடி பொருட்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் பரல்களுக்கு அருகில் காவல் பணியில் பிரிட்டிஷ் வீரர்


பஸ்ரா நோக்கிச் செல்லும் பிரிட்டிஷ் வீரர் உற்சாகமாகப் படத்திற்குப் போஸ் கொடுக்கும் காட்சி


பஸ்ரா நகரத்துக்குள் நுழைய முற்படும் பிரிட்டிஷ் படை வீரர்கள்


பக்தாத் விமான நிலையம் அருகே சதாம் ஹுசைனுக்குச் சொந்தமான சொகுசு அறையை சோதனையிடும் பிரிட்டிஷ் வீரர்கள்


வடக்கு ஈராக் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்கும் யு.எஸ்.இராணுவ வீரரை ஆர்வத்துடன் நோக்கும் ஈராக்கியச் சிறுவன்


ஈராக்கிய மக்களுக்கு உணவு வழங்கும் காட்சியை செய்தியாளர்களுக்கு காட்டும் யு.எஸ்.இராணுவ பிரிகேடியர் வின்சன் புரூக்ஸ்


பஸ்ராவிலுள்ள சதாம் அரண்மனைவளாகத்தில் பிரிட்டிஷ் மரைன் படை வீரர் ஒருவர்


பஸ்ரா நகரில் சாதாரண உடையில் நடமாடும் ஈராக்கிய வீரர்களைக் கண்டறிய அமெரிக்க வீரர் ஒருவர் ஈராக்கியர் ஒருவரை சோதனையிடுகின்றார்


வடக்கு ஈராக் பைதா நகருக்கு அருகில் உள்ள ஒரு கோதுமைக் கிடங்கிற்கு அருகில் இருந்த சதாம் ஹுசைனின் உருவப்படத்தை அகற்றும் குர்துப் படைகள்


பஸ்ரா நகரை நோக்கிச் செல்லும் பாரா இராணுவ வீரர்களைக் கடந்துசெல்லும் ஈராக்கியப் பெண்கள்

## இன்று ஒரு தகவல்

### ஆசையும் தேவையும்!

ஆசைப்படுவதில் தப்பு இல்லை. ஆனால் அந்த ஆசை தேவைக்குத் தகுந்த மாதிரி இருக்க வேண்டும். தேவைக்கு மீறிய ஆசைகள் தேவையில்லை. இந்தக் கருத்தை வலியுறுத்துவது மாதிரி கதை ஒன்று கிடைத்தது.

தேவேந்திரனுக்குத் திடீர் என்று வீடு கட்டவேண்டும் என்று ஒரு ஆசை வந்ததாம். வீடு என்றால் நாம் கட்டுவது மாதிரி வீடு அல்ல. தேவேந்திரன் வீடுஎன்றால் சும்மாவா? ஒரு பிரமாண்டமான அரண்மனை கட்டவேண்டும். அதுமாதிரி இந்த மூன்று உலகத்திலேயும் ஒரு அரண்மனை கிடையாது என்று எல்லாரும் சொல்லவேண்டும். இது அவனுடைய ஆசை. உடனே தேவதச்சரான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டு உத்தரவிட்டான். விஸ்வகர்மா தன்னுடைய உதவியாளர்களை அழைத்து ஒன்றுசேர்த்து, படாதபாடுபட்டு ஒரு பெரிய அரண்மனையைக்கட்டினார். அதைக்கட்டிமுடிக்க ஆயிரம் வருடங்களாயின.

தேவேந்திரன் வந்து பார்த்தான். அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. "என்னுடைய அந்தஸ்துக்கு இது ஒரு சாதாரணமான கட்டடம். இதைவிட இன்னும் பெரிதாகக் கட்டு என்றான். தேவதச்சர் திணறிப் போய்விட்டார். அவரால் அதற்குமேலே எதுவும் செய்ய முடியவில்லை. என்ன பண்ணுவது என்று யோசித்தார். நேராக நாரதர் காலில் போய் விழுந்தார்". "நீங்கள்தான் என்னை இந்தப் பிரச்சினையிலிருந்து காப்பாற்றவேண்டும்" என்றார்.

நாரதர் யோசித்தார். சரி, கவலைப்படாதே என்றார். நேராக இந்திரனிடமேயே போனார். இந்திரன் நாரதரைப் பார்த்தவுடன், வாருங்கள் என்று கூட்டிக்கொண்டு போய் அரண்மனையைக் காட்டினான். "இது மாதிரி ஒரு அரண்மனையை நீங்கள் வேறு எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?" என்று மிகவும் பெருமையாகக் கேட்டான். "நான் பார்த்ததில்லை, ஆனால், என்னை விட வயதிலே மூத்தவர் மகரிஷி லோமேசர்! "அவர் ஒரு வேளை பார்த்திருக்கிறாரோ என்னவோ?" என்றார் நாரதர்.

உடனே அவரை மனதில் நினைத்துத்தியானம் பண்ணினார். அடுத்தகணமே லோமேசர் அங்கே தோன்றினார். இடையிலே ஒரு சிறு துண்டு. கையிலே ஒரு கமண்டலம். தலையிலே ஒருபாய். அவ்வளவு தான் அவரிடம் இருந்தன. எதற்காகத் தலையிலே இந்தப்பாய்? என்று கேட்டான் இந்திரன். "என்னைப் போன்ற அற்ப ஆயுள் உள்ள ஒரு ஜீவன் தனியாக வீடுகட்டிக் கொண்டு திண்டாடவேண்டுமா? இந்தப்பாய் தான் ஒருவீடுமாதிரி நிழல் கொடுக்கின்றது" என்றார் அவர்.

"என்ன உங்களுக்கு அவ்வளவு கொஞ்சமான ஆயுளா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் இந்திரன். "ஆமாம்! இதோ பார். என்மார்பில் ஒரு பொற்காசு அளவுக்கு உரோமம் உதிர்ந்து விட்டது. எப்போது என்னுடைய உடம்பிலேயுள்ள எல்லா உரோமமும் உதிர்ந்துவிடுமோ அப்போது என் ஆயுள் முடியும்" என்றார் அவர், எப்பொழுது அந்த உரோமங்கள் முழுவதும் உதிரும்" என்று கேட்டான். ஒரு பிரம்மா மறைந்ததும் ஒரு உரோமம் உதிரும். என்உடம்பிலே உள்ள உரோமங்களின் எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு பிரம்மாக்கள் தோன்றி அவர்களின் ஆயுள் முடியும் போது என் உடம்பிலேயுள்ள முழுவதும் உதிரும் என்றார்.

"அப்படியென்றால் ஒரு பிரம்மாவினுடைய ஆயுள் எவ்வளவு காலம்?" என்று கேட்டான் இந்திரன். "ஒரு பிரம்மாவுக்கு 100 தேவவருஷம். ஒவ்வொரு தேவவருஷத்துக்கும் 265 தேவநாள், ஒவ்வொரு தேவ நாளிலும், உன்னைப்போன்று 14இந்திரர்கள்தோன்றிமறைகிறார்கள்" என்று மகரிஷிலோமேசர் சொன்னார். இதைக் கேட்டதும் இந்திரன் ஆடிப்போய் விட்டான். "அவ்வளவு ஆயுள் உள்ள இவரே அற்ப ஆயுள்ள என்கிறார். நான் என்னுடைய ஆயுளைப் பெரிதாக நினைத்துக் கொண்டு, பிரமாண்டமான அரண்மனைகட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறேனே" என்று நினைத்தான். எனக்கு வீடு கட்டிய வரைக்கும் போதும் என்று சொல்லிவிட்டான். அதனாலேயே நாமெல்லாரும் நம்முடைய தேவைக்குத் தகுந்த மாதிரி ஆசைப்படுவதுதான் நியாயம்.

ஆனால் அப்படியா நடந்து கொள்கின்றோம். மனிதன் கடவுளையே ஏமாற்றி காசு வாங்குவதற்கல்லவோ ஆசைப்படுகிறான். ஒருவன் கடவுளை நினைத்துத் தவம் இருந்தான். கடவுள்நேரில் வந்தார். தேவலோகத்தில் ரூபாய்க்கு என்ன மதிப்பு என்று கேட்டான். "அங்கு ரூபாய் என்பது உங்கள் பணத்தில் ஒரு கோடி ரூபாய்க்குச் சமம்" அதேமாதிரி எங்களுக்கு ஒரு நாள் என்பது உங்கள் கணக்கில் ஒரு கோடி வருஷங்களுக்குச் சமம்" என்றார் கடவுள்.

"அப்படியென்றால் எனக்கு நீங்கள் அதிகமாக எதுவும் தரவேண்டாம். உங்கள் கணக்குப்படி ஒரேயொரு ரூபா கொடுங்கள். அது போதும்" என்று வெகுசாமர்த்தியமாக இவன் சொன்னான். கடவுள் யோசித்தார். "அது ஒன்றும் கஷ்டமில்லை. ஒரு ரூபா கொடுத்துவிடுகின்றேன். ஆனால் நான் இங்கு வரும்போது எடுத்துக்கொண்டு வரவில்லை. எங்கள் கணக்குப்படியே ஒரு நாள் பொறுத்துக்கொள் பணத்தோடு வருகின்றேன்." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வாஷிங்டன் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது உறுதி செய்யப்பட்டது

(புதுடில்லி)

இலங்கைக்கு உதவி வழங்கும் ரோக்கியோ மாநாட்டின முன்னோடியாக வாஷிங்டனில் ஏப்ரல் 14ஆம் திகதி நடைபெறவுள்ள கருத்தரங்கில் இந்தியா கலந்துகொள்ளும் என்று அதன் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவர் லலித் மன் சிங்குடன் புதுடில்லியிலிருந்து செல்லும் அதிகாரியொருவரும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்வார்.

இதனைத்தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சு பேச்சாளர், இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களை இந்தியா எப்போதுமே ஆதரித்துவந்துள்ளது என்றார்.

இதுபற்றி ராஜதந்திரவட்டாரங்கள் கருத்து தெரிவிக்கையில்,

இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கம் மேற்படி கூட்டத்திற்கு அழைக்கப்படாததால், இந்தியா தனது உயர்மட்ட அதிகாரிகளை அனுப்ப தீர்மானித்திருக்கிறது.

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கையின் சமாதானத்தை ஊக்குவிக்கும் மாநாடொன்று நடைபெற்ற போது அதில் புலிகளின பிரதிநிதிகள் கலந்துகொள்வதை காரணங்காட்டி, சாதாரண்தரப் பிரதிநிதியொருவரையே இந்தியா அனுப்பிவைத்திருந்தது என்று குறிப்பிட்டன.

ஜுன் மாதம் 9,10ஆம் திகதிகளில் யாப்பானில் நோர்வே, யாப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவற்றின் கூட்டுத் தலைமையில் நடைபெறவுள்ள மாநாட்டில் இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்கும் 30 நாடுகளின் உயர்மட்டத்தினர் பங்குபற்றுகின்றனர்.

மேற்படி கூட்டம் இலங்கையின் போரினால் உருக்குலைந்து போன வடக்கு-கிழக்குப்பகுதிகளினதும் மற்றும் முழு இலங்கையினதும் அபிவிருத்திபற்றியும் போர்நிறுத்தத்தை உறுதிசெய்வதுபற்றியும் ஆராயவிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

### ஜே. வி. பி – ஸ்ரீ. சு. க. கூட்டு

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் மேலதிக பேச்சு வார்த்தை

### சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலைமுன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து அமைக்கவுள்ள கூட்டணி தொடர்பான உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக இம்மாத இறுதிக்குள் முடிவு எடுக்கப்படும் என பொதுஜனஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சரத் அமுனுகம இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

இவ்விரு கட்சிகளும் இணைந்து கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக ஏற்கனவே பல சந்திப்புகள் நடத்தப்பட்டன.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் தத்தமது யோசனைகளை கடிதமூலமாகவும் பரிமாறியுள்ளன.

இதேவேளை, இக்கூட்டணி அமைப்பது தொடர்பான இறுதித்தீர்மானங்கள் எடுக்கப்பட்டதன் பின்னர், அது குறித்து பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு அறிவிக்கப்படவுள்ளது.

இதனை அடுத்து, இருகட்சிகளுக்கும் இடையிலான இறுதி உடன்பாடு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்காவுக்கும் தெரிவிக்கப்படும்.

தற்போது இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும், கூட்டணி அமைப்பது தொடர்பான மேலதிக பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ் ஒப்பந்தம் எதிர்வரும் மே மாதம் கைச்சாத்திடப்படவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவதித்திருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(உ-8)

## இராசி பலன்

10.04.2003

(பங்குனி 27, வியாழன்)

அட்டமி பி.ப 12.33 வரை

புனர்பூசம் பி.ப 2.44 வரை

இராகுகாலம் 1.36 - 3.06

சுபநேரம் 7.36 - 9.06

சிறிராம நவமி

**மேடம்**
நண்பர்கள் மனஸ்தாபம், தன்னம்பிக்கைக் குறைவு, புத்தி சாதுரியமான செயற்பாடு

**இடபம்**
பிரயாண நன்மை, எடுத்த கருமங்கள் நிறைவேறும், நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை

**மிதுனம்**
எதிர்பாரத விவாதம், முயற்சி கைகூடும், ஸ்திரீசுகம், நல்ல பொழுது போக்கு

**கடகம்**
பெரியோரால் உதவி, பயனுள்ள முயற்சி, தெய்வசந்தை, ஆரோக்கிய நிலை

**சிங்கம்**
உறவினர் மனஸ்தாபம், காரிய அலைச்சல், சுபசெலவு, வேலைப்பளு அதிகரிக்கும்

**கன்னி**
புகழ்சேரல, புதியபொருள் சேர்க்கை, நினைத்தகாரியம் கைகூடும், குதுாகலம்

**துலாம்**
மனவுறுதி,செய்தொழிலால் நன்மை, உறவினரால் நன்மை, காரியநன்மை

**விருச்சிகம்**
மனக்கட்டுப்பாடு, பு,ர்வபுண்ணிய வேலை, காரிய மந்தம், கடும்வார்த்தை

**தனுசு**
கொடுக்கல் வாங்கல் பிணக்கு, காரிய தடங்கல், நிலைக்கேடு, பொருள் சேர்க்கை

**மகரம்**
நினைத்தகாரியம் கைகூடும், புதிய பொருள்சேர்க்கை, அபு,ர்வசந்திப்பு, வரவேற்பு

**கும்பம்**
அதிக பிரயாசை, சத்துரு ஜெயம், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரியஅனுகூலம்

**மீனம்**
புத்திரரால் கவலை, புண்ணியகருமங்கள், முயற்சி தாமதம், அபகீர்த்தி

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# அமெரிக்காவின் போக்கை இலங்கை கண்டிக்க வேண்டும்

### ஈராக் தூதரக அதிகாரி கோரிக்கை

(கொழும்பு)

அமெரிக்கக் கூட்டுப் படைகள் எமது நாட்டின் மீது தொடுத்துள்ள போர் நடவடிக்கைகளை எதிர்த்து உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளும் குரல் கொடுத்துவருகின்றன.

அந்தவகையில், எமது நட்புநாடாகவும் அணிசேரா இயக்கத்தில் எம்முடன் அங்கம் வகிக்கும் நாடாகவும் திகழும் இலங்கையும், அமெரிககாவின் மூர்க்கத்தனமான போக்கினையும் மனிதாபிமானமற்ற செயலினையும் வெளிப்படையான முறையில் கண்டிக்க வேணடும்.

இவ்வாறு இலங்கைக்கான ஈராக் தூதரக பொறுப்பாதிகாரி ஏ.எம். அப்பாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்,

மேற்கத்தேய சார்பு ஊடகங்கள் ஈராக் தொடர்பாக வெளியிடும் செய்திகளில் 90 சதவீதமானவை தவறானதாகும் என்றார். (உ-10)

# ரெலோ முதல்வராக மீண்டும் சிறீகாந்தா தெரிவானார்

(மன்னார்)

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)வின் 6வது தேசிய மாநாடு கடந்த 5,6ஆம் திகதிகளில் மன்னார் மாவட்ட கட்சிப்பணிமனையில் நடைபெற்றது.

அதில் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றபோது, முதல்வராக சட்டத்தரணி என். சிறீகாந்தா, தலைவராக ஏ.செல்வம் அடைக்கலநாதன், செயலாளராக என். இந்திரகுமார் (பிரசன்னா), உபதலைவராக கே. ஹென்றி மகேந்திரன், உப முதல்வராக எஸ். பாஸ்கரன், பொருளாளராக எஸ். வினோதர லிங்கம் ஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர்.

9 பேர் கொண்டதலைமைக் குழுவிற்கு எம்.கே. சிவாஜிலிங்கம் எம்.பி, ரவிதிலக சூரிய, எஸ். ரூபராசா ஆகியோரும் தெரிவாகியுளளனர்.

கட்சியின் பிரசாரச் செயலாளராக என். விந்தன் கனகரத்தினம், நிர்வாகச் செயலாளராக எஸ். காந்தன் சிறீஸ்கந்தராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், 21 பேர் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களாகவும் தெரிவாகியுள்ளனர்.

இந்த 6 வது தேசிய மாநாட்டில் பல அரசியல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (உ)

# பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆகியன அமைந்துள்ள இடங்களை புனிதப் பிரதேசங்களாகப் பிரகடனப் படுததக்கோரி, மாவைசேனாதிராஜா எம்.பி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். (உ)

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.
—குறள்—

# வலம்புரி

## ஜனாதிபதியின் உத்தரவு

சீன நாட்டு மீனவர்களின் படகொன்று முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இனந்தெரியாதோரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் இப்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. சீனப்படகு தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கண்காணிப்புக் குழு விடுதலைப் புலிகளோ, இலங்கைக் கடற்படையோ சீனப்படகைத் தாக்கியதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. மூன்றாந்தரப்பொன்றே சீனப் படகைத் தாக்கியிருக்கலாம் என கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. கடற்படையும், விடுதலைப் புலிகளும் தாக்கியதற்கான ஆதாரங்கள் இல்லாத நிலையில் மூன்றாந்தரப் பொன்றே சீனப் படகைத் தாக்கியிருக்கலாம் என தெரிவித்த கண்காணிப்புக் குழு, அந்த மூன்றாந் தரப்பு சமாதானத்திற்கெதிரான அமைப்பாக இருக்கலாம் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

கண்காணிப்புக் குழுவின் இவ்வறிக்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முதற்கொண்டு இந்தியா வரை சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது.

அதாவது, மூன்றாந் தரப்பென்பது வெறும் கற்பனைக் கதை. விடுதலைப் புலிகளே தம்மைத் தாக்கியதாகச் சீனப்படகில் இருந்த மீனவர்கள் தெரிவித்துள்ள போதும் சீனப்படகை மூன்றாந்தரப்பே தாக்கியதாகக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருப்பது ஓர் பொறுப்பற்ற செயலாகுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குற்றம் சாட்டியுள்ளதுடன், கண்காணிப்புக் குழுவின் அறிக்கை பக்கச் சார்பாக இருப்பதால் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இவ்வுத்தரவு கண்காணிப்புக் குழு மீது அவர் கொண்டுள்ள வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக கண்காணிப்புக் குழு மேலும் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

சீனப்படகு தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி மேற்கொண்டு ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளே படகைத் தாக்கியதாகக் குறிப்பிடப்படுமென்பது சர்வ நிச்சயம்.

ஏனெனில், விடுதலைப் புலிகள் மீது பல்வேறு குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி வருவதில் கடற்படையே முதன்மை வகிக்கிறது. அத்துடன் அரசின் கட்டுப்பாட்டைக் கடந்து ஜனாதிபதியின் உத்தரவுகளை நிறைவேற்றுவதிலேயே கடற்படைத் தளபதி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். இத்தகையதோர் சூழ்நிலையில் கடற்படைத் தளபதியின் அறிக்கை ஜனாதிபதிக்குச் சார்பாகவே அமையும்.

# ''சுட்டால் கொல்லப்படுவேன்'' என்று துப்பாக்கியுடன் நின்றவர் கூறினார்

## உடத்தலவின்ன வழக்கில் பொலிஸ் சார்ஜன்ட் தொடர்ந்து சாட்சியம்

(கோட்டை)

உடத்தலவின்ன படுகொலை வழக்கில் எதிரிகள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனு கடந்த வியாழக்கிழமை ட்ரயல் அட்பார் விசாரணை மன்றினால் நிராகரிக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் எரிக் பஸ்நாயக்க, தீப்பாலி விஜேசுந்தர, சுனில் ராஜபக்ஷ ஆகிய மூன்று நீதிபதிகள் முன்னிலையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

முதல் எதிரி அனுருத்த ரத்வத்தையின் பிணை மனு பெரும்பான்மை நீதிபதிகளால் நிராகரிக்கப்பட்டது. நீதிபதிகளில் ஒருவரான சுனில் ராஜபக்ஷ முதல் எதிரிக்கு பிணை வழங்குவதை ஆட்சேபிக்கவில்லை. உடல்நிலை, பாதுகாப்பு போன்றவற்றுடன் முதல் எதிரி ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவுமிருப்பதால் அவரது பொது வாழ்வு பாதிக்கப்படலாம் என்பதன் காரணங்களுக்காக அவருக்குப் பிணை வழங்கப்படலாம் என்று அவர் கூறினார். மேலும் முதல் எதிரி பிரசித்தமான ஒருவராய் இருப்பதால் நாட்டை விட்டு செல்வது அல்லது மறைந்து வாழ்வது சாத்தியமில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார். என்றாலும் ஏனைய இரு நீதிபதிகளும் முதல் எதிரிக்குப் பிணை வழங்குவதை ஆட்சேபித்தனர். ஏனைய 14 எதிரிகளுக்கும் பிணை வழங்கப்படுவதற்கான மனுவை மூன்று நீதிபதிகளும் ஏகோபித்து நிராகரித்தனர்.

2001ஆம் ஆண்டுத் தேர்தலின் போது உடத்தலவின்னவில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அவரது மகன்கள் லோகான் மற்றும் சானுக்க ஆகியவர்களுடன் 15 பேர் மீது 83 குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

வாதிகள் தரப்பு சாட்சியான பொலிஸ் சார்ஜன்ட் ஆனந்த எக்க நாயக்க தொடர்ந்து விசாரிக்கப்பட்டார். பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையில் அடையாள அணிவகுப்புப் பற்றி அவர் விளக்கியதுடன், அதற்காக தாம் தெல்தெனியவுக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறினார்.

அவர் கூறியதாவது,

''அங்கு நான் சென்ற போது ஒரு புலனாய்வு அதிகாரி அங்கு இருந்தார். அங்கு 15-30 நிமிடங்கள் தங்கியிருந்தேன். நீதிமன்றில் ஒரு மாஜிஸ்திரேட் சட்ட அதிகாரிகள் மற்றும் இரகசிய பொலிஸ் அதிகாரிகள் இருந்தனர். வாக்குப் பெட்டியைத் தூக்கிச் சென்றவர் அங்கு இருக்கிறாரா என்று கேட்கப்பட்ட போது என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை.

*சட்.தரணி:* வாக்குப்பெட்டிக்கும் நீர் இருந்த இடத்துக்கும் எவ்வளவு தூரம் இருந்தது?

*சாட்சி:* கொஞ்சத்தூரம் தான். வாக்குச் சாவடியின் வெளியேறும் வாயிலில் நான் நின்றேன். பெட்டி 10-12 அடி தூரத்தில் இருந்தது.

*சட்.தரணி:* எந்தத் திசையில் அந்த நபர்வந்தார்?

*சாட்சி:* உள்செல்லும் வழிப்பக்கமிருந்து அவர் வந்தார். அவர்வருவதை நான் கண்டேன்.

*சட்.தரணி:* அவர் என்ன அணிந்திருந்தார்?

*சாட்சி:* கறுப்பு காற்சட்டையும் நீல ரீசேட்டும்.

*சட்.தரணி:* அவர் கையில் என்ன இருந்தது?

*சாட்சி:* ஒரு இரும்புக்கழி, கதவருகில் அதை வைத்து விட்டு உள்ளே நுழைந்தார். பாவிக்கப்படாத வாக்குப் பெட்டியை அவர் உதைத்து விட்டு மண்டபத்துக்குள் வந்தார். பிறகு பெட்டியைத் தூக்கினார்.

அடையாள அணிவகுப்பின் போது சாட்சிகள் ஒருவரோடு ஒருவர் பேச முடியாது. ஆயுதங்களுடன் வாக்குச் சாவடிக்குள் வந்தவர்களை அடையாளம் காட்டும் படி நான் கேட்கப்பட்டேன். நான் அவர்களை அடையாளம் காட்டினேன். நான்கு தடவையாக நான் அடையாள அணிவகுப்புக்கு அழைக்கப்பட்டேன்.

*சட்.தரணி:* எத்தனையாவது முறை 15 வது எதிரியை நீர் அடையாளம் காட்டினீர்?

*சாட்சி:* எனக்கு ஞாபகமில்லை.

*சட்.தரணி:* ஆயுதங்களுடன் வந்து வாக்குப் பெட்டியைத் தூக்கியவர்களைக் காட்டும் படி கேட்கப்பட்ட போது பிழையான ஆட்களைக் காட்டினீர்?

*சாட்சி:* ஆம்

*சட்.தரணி:* உமக்கு அருகில் சிலர் துப்பாக்கிகளை நீட்டிப் பிடித்திருந்ததாக நீர் கூறினீர்?

*சாட்சி:* ஆம்

*சட்.தரணி:* உமக்கு முன்னால் நின்றவர் உம்மை அச்சுறுத்தினாரா?

*சாட்சி:* அவர் என்னைச் சுட வேண்டாம் என்றும், சுட்டால் நான் கொல்லப் படுவேன் என்றும் கூறினார்.

*சட்.தரணி:* 15வது எதிரியை நீர் அடையாளம் காட்டிய போது அவர் உம்மை அச்சுறுத்தினார் என்று கூறினீரா?

*சாட்சி:* அவ்வாறு தான் நினைக்கிறேன்.

*சட்.தரணி:* அவர் ஒரு துப்பாக்கியை குறி வைத்துக் கொண்டிருந்தார் என்று மட்டும் தான் கூறினீர்?

*சாட்சி:* இருக்கலாம்.

*சட்.தரணி:* இருவர் துப்பாக்கிகளை குறி வைத்துக் கொண்டிருந்ததாக நீர் கூறவில்லை?

*சாட்சி:* இருக்கலாம்.

*சட்.தரணி:* இரு நபர்கள் தான் வந்தனர்?

*சாட்சி:* ஆம்.

*சட்.தரணி:* மண்டபத்தில் எத்தனை பேர் இருந்தனர்?

*சாட்சி:* அவர்களில் இருவர். ஒருவர் என் அருகில். மற்றவர் வாக்குப் பெட்டியின் அருகில்.

*சட்.தரணி:* அவர்கள் முகமூடி அணிந்து வந்தார்கள்?

*சாட்சி:* அவர்களில் ஒருவர்.

*சட்.தரணி:* வந்தவர்கள் எல்லாருமே முகமூடி அணிந்திருந்தார்கள் என்று நான் கூறினால்...?

*சாட்சி:* அதை நான் ஏற்கவில்லை. ஒருவர் தன் முகத்தை மூடிக் கொண்டிருந்தார்.

*சட்.தரணி:* இராணுவத்திலிருந்து ஆட்கள் ஓடி விடுகிறார்கள் என்பதையும் அவர்கள் இராணுவ சீருடைகளையும் ஆயுதங்களையும் கொண்டு சென்று வருகிறார்கள் என்பதையும் அறிவீரா?

*சாட்சி:* அப்படியான நபர்கள் இருக்கிறார்கள்.

*சட்.தரணி:* அவர்களில் சிலர் ''பாதாள உலக'' செயல்களில் ஈடுபடுகிறார்கள்?

*சாட்சி:* இருக்கலாம்.

*சட்.தரணி:* இராணுவ உடைகளும் ஆயுதங்களும் வாடகைக்கு விடப்படுகின்றனவென்பது உமக்குத் தெரியுமா?

*சாட்சி:* தெரியாது.

இதன் பின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

மேல் விசாரணை ஏப்ரல் 29ஆம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

வாதிகள் தரப்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, அச்சலா வேங்கப்புலி, எஸ்.கே.விக்கிரமராச்சி மற்றும் மோகன செனிவிரட்ண ஆகியோர் ஆஜரானார்கள்.

எதிரிகள்தரப்பில் விஜய விக்கிரமரட்ண, பிரசன்ன ஒபயசேக்கர, திரந்தவலலியத்த, டபிள்யு.சமரஜீவ, எம்.பி.ஜயசிங்க, சுனில்சில்வா, அஷ்லேஹேரத், ஆர்.டபிள்யு. யூசுப், ஏ.ஆர்.எம்.ரஹீம், ஆர்.ஐ.ஒபயசேகர, பியல் ரத்நாயக்க, சம்பனி பத்மசேகர மற்றும் ஐ.லியனாராச்சி என்போர் ஆஜராகினர். (பி)

# ஐ. நாவை பலப்படுத்துமாறு பிரதமர் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

- ஐக்கிய நாடுகள் சபையை மேலும் பலப்படுத்துவதன் அவசியத்தை இலங்கை வலியுறுத்தியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகள் தொடுத்துள்ள போர் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை பலவீனப்படுத்தப்பட்டுள்ளதாக உலகெங்கும் அபிப்பிராயம் நிலவுவதாகவும்,

அவ்வாறன்றி அதனைப் பொய்யாக்கும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தவிரவும், ஐக்கிய நாடுகள் சபையைப் பலப்படுத்துவதற்கான இயக்கத்திற்கு உந்து சக்தியாக விளங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவைப் பணித்துள்ளார். (உ-5)

# ஒன்று திரண்டு உரிமையை உலகிற்கு வெளிக்காட்டுவோம் வாரீர்!

## மே தின ஏற்பாட்டுக்குழு அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் திருநாளாகிய மே தினத்தில், உலக உழைப்பாளிகளின் உன்னதமான அத்தினத்தில் நாம் ஓர் மாபெரும் பேரணியை நடாத்தி எமது ஒன்று திரண்ட சக்தியை, உரிமையை, உறுதிப்பாட்டை உலகிற்கு வெளிக்காட்டுவோம் வாரீர்... அணிதிரள்வோம் என யாழ்ப்பாண மாவட்ட மேதின ஏற்பாட்டுக்குழு அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் மே தின ஏற்பாட்டுக் குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

தேசிய இனங்களின் எழுச்சியே இன்றைய உலக நியதியாகிவிட்ட சூழலில் ஒடுக்கப்பட்ட இனங்களின் உழைக்கும் மக்களுடன் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து பறிக்கப்பட்ட தமது உரிமைக்காக உரத்துக் குரல் எழுப்பும் இன்றைய நிலையில் சிங்கள, பௌத்த பேரினவாதிகள் தமிழினத்தை அழித்தொழிக்க இடையறாது திரை மறைவில் தீட்டி வரும் சதிகளையும் நாம் மறந்து வாழ முடியாது.

இனச்சிக்கலின் தீர்வினை எட்டுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான நல்லெண்ண வெளிப்பாடுகளை மேற்கொண்டிருந்த நிலையிலும் அதற்கான ஒத்துழைப்பையும் தூண்டுதல்களையும் பன்னாட்டுச் சமூகம் முன்னெடுத்த போதும் பேரினவாதப் போர் வெறி கொண்ட சிங்கள தேசம் மனச்சுத்தியுடன் ஏற்றுக்கொள்ளாத நிலையில் திரைமறைவில் போருக்கான நகர்விலதான் தன்னைத் தயார்ப்படுத்தும் நிலைமையை நாம் மறைக்க முடியாது. கண்டிக்காமலும் இருக்க முடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி எமது மக்களுக்குக்கிட்ட வேண்டிய வாழ்வியலில் எந்தவொரு மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் அனுபவிக்க முடியாத நிலையில் துன்பத்தின் மேல் துன்பங்களை மக்கள் தினமும் அனுபவிக்கிறார்கள்.

எனவே, நாம் எமது தன்னாட்சி உரிமையை நிலைநிறுத்த, தமிழ் தேசியத்தைப் பேணிக்காக்க உரிமையுடனும், உணர்வுடனும் உரத்த குரல் எழுப்பி எமது ஒற்றுமையைப் பலப்படுத்த அனைத்து மக்களையும் முனைப்புடன் பேரணியிலும் மற்றும் எழுச்சி நிகழ்விலும் ஒன்றிணையுமாறு தேசத்தின் சார்பில் வேண்டுகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)



# சாயி அருளமுதம்

வேதத்தைக் கற்றல் மரணத்தை வெற்றி கொள்ள ஒருவரை இட்டுச் செல்வதால் அதுவே மிக உயர்ந்த கல்வியாகும். மற்றைய கல்விகள் யாவும் வாழும் முறைகள் நீங்கள் வாழ வேண்டிய சூழல், பொருளைச் சம்பாதித்தல், செலவழித்தல் என்பவை பற்றியும் சிறிது மகிழ்ச்சியடைய அல்லது சிறுதுன்பத்திலிருந்து தப்புவதற்குரிய உபாயங்கள் பற்றியும் போதிப்பனவாகும். ஜனன,மரணமற்ற நித்தியானந்த நிலையை எய்தும் பாதையை வேதங்கள் காண்பிக்கின்றன. சீனாவைப் பற்றியும், ரஷ்யாவைப் பற்றியும், அமெரிக்காவைப் பற்றியுமான பல்வேறு விபரங்களை மக்கள் கற்கிறார்கள். பசுபிக் சமுத்திரத்திலுள்ள எரிமலைகள் பற்றியும், துருவப் பிரதேசங்களிலுள்ள தீவுகள் பற்றியும் அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமது சொந்த உட்பிரதேசங்களைப் பற்றி எள்ளளவு கூட அறியாதிருக்கின்றனர்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# தவக்கால நற்சிந்தனை

''அவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கிறார்''

இறைவனின் வார்த்தை காலம் கடந்தது. ஞாலத்தைப் படைத்தது. வாழ்வின் ஊற்றாம் கடவுளிடமிருந்து இது புறப்படுவதால், வாழ்வனைத்திற்கும் காரணமானது. அவரின் அன்பை மனிதருக்கு கொண்டு வருவதும், அந்த அன்பில் அவர்களை நிலைக்க வைப்பதும் அதன் பணி. இந்த வார்த்தை இயேசுவில் மனித வடிவம் பெற்று, மனிதர் நடுவில் வாழ்ந்தால் அவரின் வார்த்தையை கடைப்பிடிப்பவர் சாவின் ஆதிக்கத்திலிருந்து விடுப்புப் பெற்றவர்களாகின்றனர். ஏனெனில் உண்மையின் உறைவிடமாம் தந்தையின் திருவுளத்தை இந்த வார்த்தை அறிவிக்கிறது.

காவலன்

**எமது...**

ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கடற்பிராந்தியத்தில் இடம் பெற்று வருகின்ற மோசமான மோதல் சம்பவங்கள் தொடராமல் தடுக்கப்படவும் எதிர் காலத்தில் பாரிய விளைவினை ஏற்படுத்தும் மோசமான சம்பவங்கள் இடம் பெறுவதை தடுக்கும் புதிய ஒழுங்கொன்றை உருவாக்குவது குறித்தும் இச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டது.

சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்த சு.ப.தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது புதிய கண்காணிப்புக் குழுவின் தலைவர் பொறுப்பேற்ற பின்னர் இரண்டாது தடவையாக இங்கு சமுகம் அளித்துள்ளார். அண்மைக் காலங்களில் கடற்பிரதேசத்தில் இடம் பெற்ற சில மீறல் சம்பவங்கள் சம்பந்தமாகவும் எதிர் காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் ஏற்படாதவாறு ஒரு புதிய ஒழுங்கமைப்பைக் கொண்டு வருவது சம்பந்தமாகவும் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக தரையில் எவ்வாறு எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உள்ளதோ அதே போல் கடலிலும் எமது கடலாதிக்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உள்ளது என்பதை அவர்களுக்கு விளக்கியிருந்தோம்.

யுத்தம் இடம் பெற்ற காலப் பகுதியில் எமது கட்டுப்பாட்டுக் கடற்ப் பகுதியில் இலங்கைக் கடற்படையினரின் போக்குவரத்தோ அல்லது அத்துமீறிய செயற்பாடோ இருக்கவில்லை, ஆனால் தற்போதுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை சாதகமாகப் பயன படுத்தி கடலாதிக்க பிரதேசங்களுக்குள்ளும் ஊடுருவி பல அத்து மீறல்களை கடற்படையினர் மேற் கொள்வதை எமது கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை சுட்டிக் காட்டியிருந்தார்.

எமது கடலாதிக்கப் பகுதிக்குள கடற்படையினர் அத்துமீறி நுழைவது யுத்த நிறுத்த மீறலாகவே கருதுகின்றோம், இனி வருங்காலங்களில் இவ்வகையான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் கடற்படையினர் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதை கண்காணிப்புக குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளோம் யுத்த நிறுத்த உடன் படிக்கையில் கடல் சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான விளக்கங்கள் இல்லை. அண்மைக் காலங்களில் இடம் பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து தற்பொழுது அவற்றை ஏற்படுத்திக் கொள்வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தான் கண்காணிப்புக் குழுவினர் எமது தரப்பு ஆலோசனைகளைப் பெற்றுச் செல்கின்றன. இரண்டு தரப்பினரது இணக்கப்பட்டுடனும் விரைவில் ஒரு நடை முறை ஒழுங்கை கொண்டுவருவார்கள் என நம்புகின்றோம்.

திருகோணமலையிலே எமது போராளிகள் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கு போக்குரவத்துக்கான பாதையை அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. யுத்தம் இடம் பெற்ற காலப் பகுதியில் எமது போராளிகள் இலகுவாக தமது போக்குவரத்தை மேற் கொண்டனர். ஆனால் தற்பொழுது இராணுவத் தரபினர் அதற்கு முட்டுக் கட்டை போடுகின்றனர். இதற்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். இதுமிகவும் அவசியமானதும் அவசரமானதுமான பிரச்சினை நேற்று முன்தினம் எமது திருகோணமலை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பதுமன் இது தொடர்பாக கண்காணிப்புக் குழுத்தலைவருடன் கலந்துரையாடியுள்ளார்.

அடுத்தவாரம் அளவில் மீண்டும் சந்தித்து ஓர் உடன்பாட்டுக்கு வருவதாக கண்காணிப்புக்குழுவின தலைவர் உறுதியளித்துள்ளார். என றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (இ)

# எம்.பிகளுக்கு இன்று கார் வழங்கப்படுகிறது!

## அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்பின்பேரில் இன்று பிற்பகல் ஆடம்பரக் கார்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதல் கட்டமாக 90 கார்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் உதவியுடன் கடன் அடிப்படையில் இக்கார்கள் வழங்கப்படவுள்ளன.

ஏனைய தொகுதிக் கார்கள் அடுத்த சில வாரங்களில் இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்யப் படவுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தமது தொகுதிகளுக்கு நேரில் சென்று அப்பிரதேசங்களின் தேவைகளை நேரில் கண்டறியவே இக் கார்கள் வழங்கப் படுகின்றது. (இ-8)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும், யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாகிய பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்கள் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயச் சமூகத்தினரால் இன்று பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்.

முற்பகல் 11.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பிரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரைகளை பழைய மாணவர் சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், ஆசிரியர் நலன் புரிச்சங்கச் செயலாளர் ஜே.ஜே.மைக்கேல், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)

**புதிய படைத்...**

இம் மாநாட்டிற்கு முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர்களும் இராணுவத் தரப்பினரும் யாழ்.மாநகர சபை வளவு, கல்லுண்டாய் வெளி, காக்கை தீவு மற்றும் குருநகர், சீநோர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அப் பிரதேசங்களைப் பார்வையிட்டனர்.

கல்லுண்டாய் வெளிப் பகுதியைப் பார்வையிட்ட சமயம் இப் பகுதியில் ஆடு, மாடுகள் கூடத் தங்க முடியாது இவ் விடத்திலா நாம் தங்குவது என யாழ்.படைத் தளபதி சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து வினா எழுப்பினார். அத்துடன் இப் பகுதி சேறும், சகதியுமாக இருப்பதுடன் நீர்மற்றும் பிற வசதிகள் அற்ற இடமாக இருக்கின்றது என கேள்வி எழுப்பினார்.

மேலும் குருநகர் சிநோர்ப் பகுதியில் இயங்கி வந்த யார்ழ்.மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் ஐஸ் தொழிற்சாலை தற்போது அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதால் அதனைத் தொடர்ந்து இயங்க அனுமதிக்க முடியாது எனவும் பாதுகாப்புப் படையினரின் உயர் மட்ட அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலி வந்த பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கே.டபிள்யூ.இ.கரலிஅத்த தலைமையிலான குழுவினர் பலாலி படைத் தலைமையகத்தில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்றினையும் நடத்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்.நகரப் பகுதியில் உள்ள 512வது படையணியிலும் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இதேவேளை, நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான இரா.சம்பந்தன் எமது நிருபரிடம் குறிப்பிடுகையில் யாழ். மாவட்டத்தில் படையினர் புதிய முகாம்களை அமைப்பதை எக்கட்டத்திலும் அனுமதிக்கப் போவதில்லை. இதன் மூலம் எமது மக்கள்படக் கூடிய துன்பங்களை எம்மால் சகிக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரான நடராசா மதனராஜன் குறிப்பிடுகையில் இராணுவம் புதிய முகாம் அமைப்பதை நாம் ஆதரிக்கவில்லை. பொது மக்களின் நாளாந்த தேவைகளும், பணிகளும் பாதிக்கப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வொன்று கிடைக்கும் பட்சத்தில் இங்கிருக்கும் இராணுவம்வெளியேற வேண்டும் எனக் குறிப்பிட்டார். (இ-77,7,43)

# தேர்தல் நடத்தப்படுவது தற்போது நல்லதல்ல

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய நிலையில் தேர்தலொன்றை நடத்துவது உகந்ததல்ல என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

1956ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசாங்கம் அமைத்து 47 ஆண்டுகள் நிறைவு பெறுவதையடுத்து கொழும்பில் இடம்பெற்ற மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதன் கொள்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமென ராஜ பக்ஷ மேலும் தெரிவித்தார்.

கட்சியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரி பால சிறிசேன உரையாற்றுகையில்,

சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் மக்களுக்குக் கிடைத்த நன்மைகளை மறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டினார்.

பொதுவான கூட்டு ஒன்றை அமைப்பதற்காக ஜே.வி.பியுடன் நடத்தும் பேச்சுக்கள் வெற்றிகரமாக அமைந்துள்ளது எனவும், இத்தகைய கூட்டணியின் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்று முற்போக்கு இடதுசாரிக் கட்சிகளும் வலுவடையுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை தமது கட்சி ஆட்சிப் பீடம் ஏறியதும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கைது செய்யப்படுவார் என்று கூறப்பட்ட கருத்துக்கள் குறித்து பேசிய போது இது போன்ற விடயங்கள் ஆலோசிக்கப் படவில்லை என அவர் மேலும் கூறினார். (இ-5)

# பயிற்சி நெறியில் இணையலாம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து வருகை தரும் தொழிற்பயிற்சி வல்லுநர்கள் யாழ்.குடாநாட்டில் வேலையற்றிருக்கும் 18-30 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு 4 மாதங்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இத் தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் திரட்டப்படுகின்றன. விண்ணப்பங்களைத் திரட்டும் பணியில் யாழ்.சமூக மேம்பாட்டு நிறுவனம் இன்று வியாழக் கிழமை ஈடுபடவுள்ளது. இதன்படி இருபாலை ஞானபாஸ்கரோதயா சங்கம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நீர்வேலி தெற்கு மாதர் சங்கம், சிறுப்பிட்டி இந்து த.க. பாடசாலை, ஆவரங்கால் நடராச ராமலிங்க வித்தியாலயம், கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் காலை 9 மணி முதலும், சோமஸ்கந்தக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, ஊரெழு கணேச வித்தியாலயம் ஆகியவற்றில் பிற்பகல் 1 மணி முதலும் விண்ணப்பங்கள் திரட்டப்படவுள்ளன. (த)

# நினைவுக்கல் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

கடற்புலி மேஜர் சாருமதியின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்று மாலை தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் கொடிகாமம் நாவலடி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், கடற்புலி மகளிர் அணித் தளபதி பூரணி, தளபதி வீரமணி ஆகியோர் வீரவணக்க் உரைகளை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நின்னைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது. (த)

**சந்திரிகா...**

செரரீன் கோட்டையில் நடைபெற்ற இச்சந்திப்பில் முன்னாள் இந்தியத் தூதுவர் சிறிசங்கர் மேனன், இந்தியத் தூதுவர் நிருபம் சென் ஆகியோரும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் லக்ஷ்மன் கதிர்காமர், பேரியல் அஷ்ரப், ஜனாதிபதியின் செயலாளர் பாலபெத்தபெண்டி, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மங்கள முனசிங்கா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் சுப்பையா வேலாயுதம் (சின்னராசா, உரும்பிராய்)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சுப்பையா வேலாயுதம் 9.4.2003 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சுப்பையா அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சண்முகம் செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி இராசமணி சோமசுந்தரம், திருமதி சிவக்கொழுந்து இராமசாமி, காலஞ்சென்ற சுப்பையா ஆறுமுகம், திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், S.V.மகேந்திரன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), ரவிந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), திருமதி குகேந்தினி புண்ணியமூர்த்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதா, மதிவதனி, நிமலினி, சுதா, புண்ணியமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் லாவண்யா, சுகன்யா, அருண்மாறன், ஆரணியா, நிரு, ராகுலன் பாரதி, அஜந், சரண்யா, ஜனன், ஜனாத், ஜெனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (10.04.2003) பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிவன் வீதி,
உரும்பிராய்-கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்
**S.V.மகேந்திரன்** (மகன்)

[6896]

ITN Sales ITN Sales ITN Sales ITN Sales ITN Sales

I.T.N. இன்

மாபெரும் மலிவு விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு எம்மிடம் பழைய புதிய பக்திப் பாடல்கள், சினிமாப் பாடல்கள், கர்நாடக சங்கீத, சமஷ்கிருத CD க்கள், வீடியோ CD க்கள் மற்றும் MP-3 CD க்கள் அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள உங்கள் தெரிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

குறிப்பு: இவ் மலிவு விற்பனையானது 14-04-2003 புது வருடம் வரை மட்டுமே

I.T.N. வீடியோ ஓடியோ மியூசிக் சென்ரர்

305, பலாலி வீதி (பரமேஸ்வராச் சந்தி) யாழ்ப்பாணம்

[C/5978]

ITN Sales ITN Sales ITN Sales ITN Sales ITN Sales

புதிய பிரிவு

A/L-2005

[கலை வர்த்தகம்]

ஆரம்பம்

12.04.2003 சனி

காலை -8.30 (மு.நே)

DMI
யாழ் நகர்

[C/5977]